பக்கங்கள்: பத்து

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு 2030 ஆடி 06 வியாழக்கிழமை [22-07-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்:204

## முகாம் பொறுப்பதிகாரி உட்பட இருவர் நேற்று குண்டுவெடிப்புக்குப் பலி!

### தம்பாலையில் சம்பவம்

வலி.கிழக்கு, ஜூலை 22

தம்பாலை இராணுவ முகாம் அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் அந்த இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியும் சிப்பாய் ஒருவரும் உடல் சிதறிப் பலியானார்கள்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.10 மணிஅளவில் வலிகாமம் கிழக்குபம்பாலைப் பகுதியில் உள்ள தோட்டக் காணி ஒன்றில் இடம்பெற்றது.

தம்பாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் கொத்தலாவல (வயது 28 — பிங்கினிய) லான்ஸ் கோப்ரல் இந்திரட்ண (கடத்தெனியா) ஆகியோரே கொல்லப்பட்டவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் தலைமையில் இன்று ஐ. தே. கட்சி ஆர்ப்பாட்டம்

### கொழும்பில் பதற்றமான சூழ்நிலை

கொழும்பு, ஜூலை 22

ஐ.தே.க. தொண்டர்கள் லிப்டன் சதுக்கத்தில் இன்று ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றைக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடத்தஉள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி ஐ.தே.க. நடத்திய பேரணியைத் தாக்கியதைக் கண்டித்து நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டத்தைக் குழப்பச் சில சக்திகள் திட்டமிட்டுள்ளன என்று கூறப்படுவதால் இன்று பெரும் பதற்றமான சூழ்நிலை உருவாகலாம் எனச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகையாளர்களின் ஊர்வலம் தடுக்கப்பட்டது

## அலரி மாளிகைக்குச் சமீபமாக கொடும்பாவிகள் எரிப்பு

கொழும்பு, ஜூலை 22

கடந்த 15 ஆம் திகதி ஐ.தே.க. நடத்திய பேரணியின் போது பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து கொழும்பு ஊடகங்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் அலரிமாளிகையை நோக்கி நேற்று நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்கு முன் கூடிய 300க்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்,

கோஷங்களை எழுப்பியவாறு அலரி மாளிகையை நோக்கி அவர்கள் முன்னேறினர்.

அங்கு போடப்பட்டிருந்த வீதித் தடையில் இருந்த பொலீஸார் ஊர்வலத்தில் சென்றவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

ஆனால் அந்தத் தடையை மீறி பத்திரிகையாளர்கள் முன்னேறினர்.

(9ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 22

வன்னியில் இராணுவக்கட்டுப்பாட்டற்றபகுதிக்குச் செல்ல முடியாது நிர்க்கதி நிலையில் வவுனியாவில் தங்கியுள்ளவர்களில் சுமார் 500 பேர் நேற்று அரச அதிபர் செயலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்,

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குத் தம்மை அனுப்ப உடன் நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கோஷம் எழுப்பினர்.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ், மேலதிக அரச அதிபர் என். ரகுநாதபிள்ளை ஆகியோரைச் சந்தித்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 300 பேருக்கு தொலைபேசி வசதி

யாழ்ப்பாணத்தில் மேலும் 300 பேருக்கு தொலைபேசி வசதி கிடைக்கவிருக்கின்றது.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் இது தொடர்பான பட்டியல்தயாரிக்கப்பட்டுள்ளதுஎன்றும்

ஓரிரு தினங்களில் அவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாட வினாக் குறைப்பு

எதிர்வரும் ஒகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் வினாக்கள் குறைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி — தூயகணிதம் I, II ஆகிய வினாத்தாள்களில் கேட்கப்படும் 10 கேள்விகளில் ஏழு கேள்விகளுக்கே விடை அளிக்க வேண்டும் என்றும் —

பிரயோக கணிதம் I, II ஆகிய வினாத்தாள்களில் கேட்கப்படும் 10 கேள்விகளில் 6 கேள்விகளுக்கே விடை அளிக்க வேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌதிகவியல், இரசாயனம், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களின் வினாத்தாள்களில் பகுதி ஒன்றில் மாற்றம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்.அலுவலகத்துக்கு அம்புலன்ஸில் அழைத்து வரப்பட்ட நோயாளிகள்!

### ஹெலி மூலம் அனுப்பக் கோரிக்கை

வவுனியா, ஜூலை 22

அவசர சிகிச்சை பெற வேண்டியுள்ள நான்கு நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக ஹெலி மூலம் வவுனியாவுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் புதுக்குடியிருப்பு அலுவலக இணைப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பிரஸ்தாப நான்கு நோயாளிகளையும் அம்புலன்ஸ் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் புதுக்குடியிருப்பு அலுவலகத்துக்கு கூட்டிவந்த முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரியும் ஏனைய வைத்திய அதிகாரிகளுமே

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு ஆசிரியர்களின் இடர்காலக் கொடுப்பனவு மற்றும் அதிபர் சம்பள நிலுவைக்கு ரூ.15கோடி

### நேற்றைய சந்திப்பின்போது பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 22

வடக்கு — கிழக்குப் பாடசாலைகளில்பணிபுரியும் ஆசிரியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு மற்றும் அதிபர்களுக்கான சம்பள நிலுவை ஆகியவற்றை வழங்க உடனடியாக 15 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவுக்கும், கல்வி; உயர்கல்வி அமைச்சு பிரதி அமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

பிரதி அமைச்சரின் அலுவலகத்தில் நடந்த இந்தப் பேச்சுக்களின்போது தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஒன்பது அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

பிரதிஅமைச்சருடன்அமைச்சின்மேலதிக செயலர்களான உபசேன சேனநாயக்க, கருணரத்தின, தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் லக்ஷ்மன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நேற்று மூன்று தாக்குதல் சம்பவங்கள்

கிழக்கில் நேற்று இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் மூன்று சிப்பாய்களும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐயந்தியாய கிராமத்தில் நேற்றுப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற 45 நிமிட மோதலில் இரண்டு சிப்பாய்கள் உயிரிழந்தனர். இந்த மோதலில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் இருவரும் உயிரிழந்தனர்.

வாழைச்சேனை கல்மடுப் பகுதியில் நேற்றுக் காலை ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

ஏறாவூரில் ரயில் நிலையச் சந்தியில் நேற்றிரவு 8–30 மணியளவில் காவலுக்கு நின்ற பொலீஸ் கான்ஸ்டபிள் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனேட் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண்ணின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது!

மன்னார், ஜூலை 22

மன்னார் பள்ளிமுனையில் கடந்த 11 ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டுக்கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஜடா காமலேட்டா என்ற இளம் பெண்ணின் சடலம் மன்னார் நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று தோண்டி எடுக்கப்பட்டது.

அதன்பின்னர் இந்தச் சடலத்தை ஆய்வுக்கு கொழும்புக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தாக்கல் செய்த மனு நீதிவானால் ஏற்கப்பட்டு, சடலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தடுத்துவைக்கப்பட்டுள்ள இரு படையினரையும் விசாரிக்க குற்றப்புலனாய்வுத்துறையினருக்கு நீதிவான் அனுமதி வழங்கினார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூ. சங்கத்தில் அரிசி விநியோகம்

தென்மராட்சி, ஜூலை 22

தனியார் கடைகளில் அரிசி விலை அதிகரிப்பை அடுத்து பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் பங்கீட்டு அட்டைக்கு நாட்டரிசி கிலோ 31 ரூபா 50 சதப்படி வழங்கப்படுகிறது.

'உ' பங்கீட்டு அட்டைக்கு 10 கிலோ அரிசியும், 'அ' 'இ'. பங்கீட்டு அட்டைகளுக்கு தலா 5 கிலோ அரிசியும் வழங்கப்படுவதாகவும்—

மேலதிகமாக வெள்ளை நாடு அரிசி கட்டுப்பாடின்றி கிலோ 31 ரூபா 50சதத்துக்கு வழங்கப்படுவதாகவும்—

சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் சகல பங்கீட்டு அட்டைகளுக்கும் தலா இரண்டு கிலோ சீனி வீதம் வழங்கப்படுவதாகவும்மேலும் தெரிவித்தார்.

(ஐ-117)


## நன்றி நவில்கின்றோம்

அமரர்

### உயர்திரு. தம்பிராசா ஸ்ரனிஸ்லஸ்

[இளைப்பாறிய முகாமையாளர், இலங்கைவங்கி]

எமது குடும்பத் தலைவர் தம்பிராசா ஸ்ரனிஸ்லஸ் அவர்களின் இறுதிச் சடங்கில் பங்குகொண்டு பல வகைகளிலும் முன்னின்று உதவிசெய்த அன்பர்கள், உற்றார், உறவினர், இலங்கைவங்கி ஊழியர்கள், அருட்தந்தையர்கள், மலர் வளையம் சார்த்தியோர், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

றோஸ்மலர் ஸ்ரனிஸ்லஸ் (மனைவி)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

70/2, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (67628)


## மரண அறிவித்தல்கள்

### கந்தசாமி விவேகானந்தன்

(பாபு)

கந்தசாமி விவேகானந்தன் அவர்கள் 19- 07- 99 திங்கட்கிழமையன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் கந்தசாமி மகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், கமலேஸ்வரி (கொழும்பு), இராஜேஸ்வரி (இத்தாலி), அருளானந்தம் (உடுப்பிட்டி), கோமதி (கொழும்பு), பரமானந்தம் (கொழும்பு), சச்சிதானந்தம் (உடுப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தில்லைநாதன் (கொழும்பு), சற்குணராசா (இத்தாலி), ரவீந்திரராசா (கொழும்பு)ஆகியோரின் அன்பு மைத்துனரும் மேனகா, விதுசனா, டினோதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20- 07- 99 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்று பூதவுடல் வல்லை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கு. கந்தசாமி
(தந்தை)

குருநாதர் ஸ்ரோர்ஸ்,
உடுப்பிட்டி: (67626)

திருமதி

### றோஸ் பரிமளநாயகம் அற்புதராஜா

(முன்னாள் ஆசிரியை, அச்சுவேலி மகா வித்தியாலயம்)

தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி றோஸ் பரிமளநாயகம் அற்புதராஜா ஞாயிற்றுக்கிழமை (18 - 07 - 99) அன்று மாலை 8.30 மணிக்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சண்முகம் துரையப்பாவின் அன்புப் புதல்வியும் சின்னையா சிறில் அற்புதராஜா (ஓய்வுபெற்ற லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மங்களநாயகம், அருமைநாயகம், திசைநாயகம், குணநாயகம் மற்றும் பிள்ளைநாயகம்(கனடா), அருந்தவநாயகம்(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அரியதுரை. மகிழ்மணி, அற்புதமலர் மற்றும் தேம்பாமலர் (U. K), இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்), அரசரட்ணம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் — புகையிரதத் திணைக்களம்) ஆகியோரின் மைத்துனியும் வண. சிறில் மதனராஜ் (ஜேர்மனி), காலஞ்சென்ற சுகுணராஜ் மற்றும் சந்திரராஜ் (பொறியியலாளர், சீனித் தொழிற்சாலை, புத்தளம்), சகுந்தலாதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தயாநிதி, சந்திரா, றொபேட்ஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், நொயலா, வில்பிரட், சுடேஸ், மனோஜ், ஹெப்சி, டினேஸ், றொஷான், நினோ, நிம்மா ஆகியோரின் பேர்த்தியும், மத்தியாஸ், லூக்காஸ் ஆகியோரின் பூட்டியும் தோமஸ் அவர்களின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதி நல்லடக்க ஆராதனை கொழும்பில் இன்று (22-07-99) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும். நாளை(23-07-99) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு 'ஆனந்த அவனியு' உடுவிலில் வசிக்கும் திரு. எஸ். ஆர். யேசுபாலனின் இல்லத்தில் ஜெபக் கூட்டம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

தகவல்:
எஸ். ஆர். யேசுபாலன்

'ஆனந்த அவனியு',
உடுவில். ([illegible])

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு பல்கலைக்கழக விளையாட்டு அவை பல்கலைக் கழக மைதானத்தில் நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ கலைவாணி வி. க. அணி எதிர் யாழ். பல்கலைக் கழக வி. க. அணி. (இ-6)

★ ★ ★

யாழ், பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு பல்கலைக் கழக விளையாட்டு அவை பல்கலைக் கழக மைதானத்தில் நடத்தி வரும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் நாளை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ மாலை 4 மணி—யாழ். பல்கலைக் கழக வி. க. அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி வி. க. அணி.

★ மாலை 5 மணி — ஒல்ட் கோல்ட்ஸ் வி.க. அணி எதிர் கிறாஸ்கொப் பேர்ஸ் வி. க. அணி. (இ-6)

★ ★ ★

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்க ஏற்பாட்டில் நடைபெற்று வந்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறவிருக்கின்றது.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கே. பொன்னம்பலம் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் (இ-3)

## பழமரச்செய்கைப் பயிற்சி வகுப்பு

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் வட்டு. வடக்கு கிராம உத்தியோகத்தர் பணிமனையில் இன்று காலை 10 மணியளவில் அப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பழமர உற்பத்தி சம்பந்தமான பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தவுள்ளனர். அதில் சகலரையும் பங்குபற்றுமாறு நிறுவனத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ—175)

## சமூக சேவை அமைப்புகளின் விவரம் சேகரிப்பு

வலி. மேற்கு, ஜூலை 22

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வெளிநாடுகளின் உதவியின்றி இயங்குகின்ற சமூக சேவை அமைப்புக்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

கிராம உத்தியோகத்தர்கள் தத்தமது பிரிவிலுள்ள அமைப்புக்களின் விவரங்களைத் திரட்டுகின்றனர்.

(ஐ-175)


**நாகம்ஸ்**
சுன்னாகம்

ரஜனி - குஷ்பு —ஜனகராஜ் நடித்த
**பாண்டியன்**
காட்சிகள் 11.00, 2.00
[ புதிய நேரம் ]
[67554]



**ராஜா**
யாழ்ப்பாணம்

பிரபுதேவா - கஜோல் மற்றும் பலர் நடித்த
**மின்சாரக் கனவு**
10.30, 2.30
[illegible]


## நெடுந்தீவுப் பகுதியில் சுகாதார தொண்டர்சேவை

யாழ்ப்பாணம். ஜூலை 22

'நெடுந்தீவுப்பகுதி மக்களின் சுகாதார நலன் கருதி அங்கு சுகாதாரத் தொண்டர் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது.

சுகாதாரத் தொண்டர் சேவையை ஆரம்பிப்பதற்கு முதற்கட்டமாக அங்கு தெரிவு செய்யப்பட்டுள்ள தொண்டர்களுக்கு சுகாதார தொண்டர் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நேற்று ஆரம்பமானது. மூன்று நாள்களுக்கு நடைபெற உள்ள இந்தப் பயிற்சியினை வழங்க யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவில் இருந்து நால்வர் கொண்ட குழு ஒன்றுநெடுந்தீவுக்குப்பயணமானது.

சுகாதார சேவைகள் பிரிவைச்சேர்ந்த யாழ் மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் ரி. மகாதேவா, சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் எஸ். இராசேந்திரா, தொழுநோய் தடை சுகாதாரப்பரிசோதகர் எம். சிவபாலன், மலேரியா தடை சுகாதாரப் பரிசோதகர் எஸ். ரங்கநாதன் ஆகியோரே இந்த நால்வருமாவர். (இ51–)

## தொழில் விருத்தி சுழற்சி முறைக் கடன்

யாழ்ப்பாணம், ஜூலை 22

நோர்வேயிலுள்ள குருநகர் இளைஞர்களின் உதவியுடன் குருநகர் கடல் உணவு ஏற்றுமதியாளர்கள், தொழில் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு தொழில் விருத்திச் சுழற்சி முறைக் கடன் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இந்தக் கடன் திட்ட அங்குரார்ப்பண வைபவம் கடந்த திங்கட்கிழமை குருநகர் கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் பணிமனையில் அதன் தலைவர் சி. சிலுவைதாசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் தொழில் பாதிக்கப்பட்ட 33 குடும்பங்களுக்கு இரண்டு லட்சத்து 24 ஆயிரம் ரூபா டனாக வழங்கப்பட்டது.

(இ-5)

## அரச செலவில் சடலங்கள் அடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

கடலோரம் நீந்தி வந்த போது இராணுவத்தால் சுடப்பட்டு இறந்ததாகப் பளைப் பொலீஸாராலும்—

சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்ததாக சாவகச்சேரிப் பொலீஸாராலும்—

கடந்த 14ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட மூன்று சடலங்கள் நேற்று முன்தினம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

இனம் காணும் பொருட்டும் பிரேத பரிசோதனையின் நிமித்தமும் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சடலங்கள் ஒருவாரமாகியும் இனம் காணப்படாத நிலையில் அரச செலவில்அடக்கம் செய்யப்பட்டன. (இ-15)

## ரயில் சாரதிகள் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 22

ரயில்வே என்ஜின் சாரதிகள் நேற்று முன்தினம்மேற்கொண்ட ஒருநாள் அடையாளவேலைநிறுத்தம் காரணமாக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

பல கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் அவர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக 50சதவீதப்பாதிப்பு மட்டுமே ஏற்பட்டது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதிக்குள் தீர்வு காணப்படாவிட்டால் தொடர் வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக ரயில்வே எஞ்சின் சாரதிகள் அறிவித்துள்ளனர்.

அதே நேரம் — புத்தளம் பகுதியில் இரு ரயில் எஞ்சின்கள் தாக்கப்பட்டன என்றும் —

அவற்றுக்குக் கணிசமான சேதம் ஏற்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## சமய சந்திகளில்

புலோலி தெற்கு சாரையடி அன்னை வேளாங்கண்ணி ஆலய திருச்சொரூப பவனி நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4. 30 மணிக்கும், திருப்பலிப் பூசை மறுநாள் ஞாயிறு காலை 7மணிக்கும் இடம் பெறும்.

(ஐ-109)


JAFFNA DISTRICT
**Basket Ball Association**
**District Tournament - 1999**
**R. Rajkumar Challenge Trophy**
Organised by
**J. D. B. A.**
Sponsored by
**R. Vasanthakumar**
**Finals**

Women:
Youth Camel Vs University of Jaffna

Men:
University of Jaffna Vs Centralites Sports Club

Chief Guest:
Mrs K. Ponnampalam
(Principal, Vembadi Girls High School)

On
22nd July 1999 at 4-00 p.m
At
**St. Johns College Basket Ball Courts**

— J.D.B.A

(C/8261)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாக் கரையில் 100 அகதிகள் மீட்பு!

## சரக்குக் கப்பல் மூலம் சட்டவிரோதப் பயணம்

றொறன்ரோ, ஜூலை 22

**கிழக்கு ஆசிய நாடு ஒன்றில் இருந்து சட்டவிரோத குடியேற்ற வாசிகள் சுமார் 100 பேரை ஏற்றிவந்த சரக்குக் கப்பல் ஒன்றை கனடா கரையோரக் காவற் படையினர் கைப்பற்றி இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**

கனடாவின் மேற்குக் கரைக்கு அப்பால் பசுபிக்கடலில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இக்கப்பலை கரையோரத்தில் பணியில் ஈடுபட்டிருந்த கனடிய கரையோரக் காவற் படை விமானம் ஒன்று கண்டுபிடித்ததை அடுத்தே அதிலிருந்த குடியேற்ற வாசிகள் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 70 ஆண்களும் 20 பெண்களும் அவர்களில் அடங்கி இருந்ததாகவும் —

வெளிநாடுகளில் இருந்து ஆள்களை சட்டவிரோதமாக நாடுகடத்தும் முகவர்கள் மூலமாக இவர்கள் அக் கப்பலில் ஏற்றப்பட்டிருப்பதாகவும்—

தெரிகிறது.

கனடாவின் பசுபிக் கரைக்கு அப்பால் பெரும் எண்ணிக்கையான சட்டவிரோத குடியேற்றவாசிகள் கைது செய்யப்பட்ட பெரிய சம்பவம் இது என்று கரையோர காவற்படை அதிகாரிகள் கூறினர்.

இவர்கள் எந்த நாட்டில் இருந்து புறப்பட்டனர். என்ற தகவல் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ)

## சுஹார்ட்டோ சுகயீனம்

ஜகார்த்தா, ஜூலை 22

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சர்வாதிகாரி சுஹார்ட்டோ பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

78வயதான சுஹார்ட்டோ நேற்று முன்தினம் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டார். (ஐ)

## விமானம் மறைவு

மனாக்குவாவில் இருந்து புறப்பட்ட பயணிகள் விமானம் ஒன்று இடை நடுவில் காணாமற் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவே இந்த விமானம் காணாமற் போனமை தெரிய வந்துள்ளது. இதில் பதினான்கு பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

விமானத்தைத் தேடும் முயற்சியில் விமான நிறுவனம் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது. [ஐ-க]

## அரசியலிற் பிரவேசிக்க விரும்பியகெனடி ஜூனியர்

நியூயோர்க், ஜூலை 22

தனது தந்தையைப் போலவே அரசியல் வாழ்வில் ஈடுபட விருப்பம் கொண்டிருந்த கெனடி ஜூனியர் நியூயோர்க் செனட்டர் பதவிக்குப் போட்டியிட ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் அப்பதவிக்குப் போட்டியிடக் ஹிலாரி கிளின்டன் முன்வந்ததை அடுத்து அவர் அதனை விட்டுக்கொடுத்தாராம்.

'நியூஸ் வீக்' சஞ்சிகை இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

வேல்ஸ் இளவரசி டயானாவின் மறைவுக்குப் பின் கெனடி ஜூனியரின் மரணமே அமெரிக்கர்களை அதிகம் பாதித்துள்ள சம்பவம் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான தந்தையின் உடலுக்கு மூன்று வயதுச் சிறுவனாக நின்று மரியாதை செலுத்திய ஜூனியரைப் பலரும் நினைவு கூருகின்றனர்.

கெனடி குடும்பத்துக்கு உள்ள சாபம் எனப் பலரும் கூறும் துயரச் சம்பவங்களின் தொடர்ச்சியாக ஜூனியரின் மரணமும் சம்பவித்துள்ளது. (ஐ)

## கெனடியின் விமானத்தில் சிறிய தகவல் பதியும் கருவி

### முக்கிய துப்பு கிடைக்கலாம்

நியூயோர்க், ஜூலை 22

ஜூனியர் கெனடியால் செலுத்தப்பட்டு விபத்துக்குள்ளான சிறு விமானத்தில் வானொலியுடன் இணைந்ததாகக் குரல் ஒலியைப் பதிவு செய்யக்கூடிய கருவி ஒன்றும் பொருத்தப்பட்டிருந்ததுடன் அதில் சில வேளைகளில் கடைசியாக விபத்து நிகழ்வதற்குச் சில கணங்கள் முன்பாக இடம்பெற்ற உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடும் எனப் புலன் விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை—

கெனடி ஜூனியர் மனைவி, மைத்துனி ஆகியோரின் சடலங்ககளைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. புதிய தடயப் பொருள்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-ரி)

## காஷ்மீரில் 19 பேர் படுகொலை

ஸ்ரீநகர், ஜூலை 22

ஜம்மு - காஷ்மீரில் கடந்த திங்கள் இரவு நடந்த வெவ்வேறு வன்முறைச் சம்பவங்களில் தீவிரவாதிகள் 19 பேரை கொலை செய்துள்ளனர்.

லிகோட்டா கிராமத்தில் கிராம பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் 5 பேர், 8பெண்கள் உட்பட 15பேரையும் பூஞ் மாவட்டத்தில் மண்டி வட்டத்தில் ஸ்ரீநகர் கிராமத்தில் எல்லை வீதி அமைப்பு ஸ்தாபனத்தின் 4 ஊழியர்களையும் தீவிரவாதிகள் கண் மூடித்தனமாக சுட்டுக் கொன்றுள்ளனர். இச்சம்பவத்தில் மேலும் 6 பேர் காயமடைந்தனர். (ஐ-க)

# பாகிஸ்தானுடன் மிக விரைவிலேயே பேசுமாறு கோருகிறார் கிளின்ரன்

## வாஜ்பாயுடன் தொலைபேசியில் உரையாடல்

புதுடில்லி, ஜூலை 22

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் எவ்வளவு விரைவாக நேரடிப் பேச்சுக்களில் ஈடுபட முடியுமோ அவ்வளவு விரைவாக பேச்சுக்களை நடத்துமாறு அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயிடம் கோரியுள்ளார்.

இந்தியப் பிராந்தியத்தில் இருந்து பாகிஸ்தான் ஆதரவிலான ஊடுருவல்காரர்களின் வெளியேற்றம் பற்றி நேற்று முன்தினம் வாஜ்பாயுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டறிந்த போது மேற்படி வேண்டுகோளை கிளின்ரன் வெளியிட்டார் எனவெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை—

காஷ்மீர் பகுதியில் ஏதாவது புதிய ஊடுருவல் இருக்குமாயின் கடுமையான இராணுவப் பதிலடி கொடுக்கப்படும் என்றும் —

பிரச்சினைக்குரிய காஷ்மீர் பகுதியில் உள்ள ஊடுருவல் காரர்களுக்கான ஆதரவை இஸ்லாமாபாத் விலக்கிக் கொண்டால் மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் —

இந்தியா நேற்றுத் தெரிவித்துள்ளது.

முஷ்கோ, டிராஸ், பட்டாலிக் பகுதிகளின் சில இடங்களில் இன்னமும் ஊடுருவல் காரர் இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது. (ஐ-க)

## பூலான்தேவி விருப்பம்

புதுடில்லி, ஜூலை 22

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மிர்சாபூர் தொகுதியில் மீண்டும் போட்டியிட பூலான் தேவி விருப்பம் தெரிவித்துள்ளார்.

சமாஜிவாதிக் கட்சி சார்பாக அவர் இத் தொகுதியில் போட்டியிட்டு முன்னர் வென்றுள்ளார் [க]

# தாய்வான் நோக்கி சீனப் படைகள்!

## உஷார் நிலையில்

ஹொங்கொங் ஜூலை 22

நீண்டகாலமாக கடைப்பிடித்து வந்த 'ஒரேசீனா' என்ற கொள்கையை தாய்வான் ஜனாதிபதி லீ டெங்கிழய் கைவிட்டமையை அடுத்து சீன இராணுவ அணிகள் அதி உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பெய்ஜிங் ஆதரவிலான ஹொங்கொங் பத்திரிகைகள் செவ்வாயன்று செய்தி வெளியிட்டுள்ளன.

இதே வேளை —

தாய்வான் தானாக சுதந்திரப் பிரகடனத்தை வெளியிடும் பட்சத்தில் தாய்வான் தீவிற்குள் பிரவேசித்து தலையீடு செய்யும் வகையில் சீன அரசாங்கம் மேற்கொள்கின்ற எத்தகையதொரு தீர்மானத்துக்கும் கிட்டத்தட்ட 90 வீதமான சீன மக்கள் ஆதரவு வழங்கியுள்ளமை செவ்வாயன்று வெளியிடப்பட்ட பொதுமக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் —

சீனாவின் ஏழு நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீடுகளின் பிரகாரம் அநேகமானோர் தேவையேற்படின் தாய்வானை ஆக்கிரமிக்க சீனப் படையினர் அனுப்பப்பட வேண்டுமென கூறியுள்ளனர்.

அத்துடன் தாய்வானின் அறிவிப்பு பெரும்பாலானோரைத் திகைப்பில் ஆழ்த்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ஐ-க)

## இந்திய மாநிலங்களில் வெள்ளம்

இந்தியாவின் பல மாநிலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருக்கின்றது.

இதுவரை 131 பேர் இறந்துள்ளதுடன் இருநூறு கிராமங்கள் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளன. 3 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அஸாம், பீஹார், இமாஷல் மற்றும் குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களே வெள்ளத்தின் சீற்றத்துக்கு இலக்காகியுள்ளன.

இங்குள்ள ஆறுகளில் அபாய எல்லையைத் தாண்டி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

## சனத்தொகை 600 கோடியைத் தாண்டியது

வாஷிங்டன் ஜூலை 22

உலகின் சனத் தொகை கடந்த திங்களன்று 600 கோடியைத் தாண்டி விட்டதாக ஐ. நாவின் சனத் தொகைக் கணிப்புப் பீடம் தெரிவித்துள்ளது. (ஐ)

## கொலம்பிய விண்கலத்தின் பயணம் இடை நிறுத்தம்

ஒரு பெண்ணின் தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவை விண்வெளிக்கு ஏற்றிச் செல்ல இருந்த அமெரிக்காவின் கொலம்பிய விண்கலம் கடந்த செவ்வாயன்று புறப்படுவதற்கு 6 செக்கண்டுகள் இருக்கையில் அதன் பயணம் நிறுத்தப்பட்டது.

அதன் இயந்திரப் பகுதியில் ஐதரசன் அழக்கம் வழமைக்கு மாறாக காணப்பட்டதைக் கடைசி நிமிடத்தில் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் அதன் பயணத்தை நிறுத்திவிட்டனர்.

இந்த விண்கலம் விண்ணுக்குச் செலுத்தப்படும் வைபவத்தில் அமெரிக்க அதிபரின் துணைவியான ஹிலாரி கிளின்ரன் மகள் செல்ஸா ஆகியோர் கலந்து கொண்டனர். [ஐ]


EDNA ஸ்ரிக்கர் அதிர்ஷ்டம்

அதிர்ஷ்ட இலக்கம் 350 இற்கு மேல்

20 EDNA ஸ்ரிக்கருக்கு 1 தொப்பி இலவசம்
25 EDNA " 1 மென்பந்து "
50 EDNA " 1 ரீசேட் "

யாழ். கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

BINCO ரொபி அதிர்ஷ்டம்

BINCO ரொபி வெற்று உறை 5 அனுப்பினால் மாதாந்த சீட்டிழுப்புக்கு

மவுன்ரன் பைசிக்கிள், ஓகன் செட், கசற்றெக்கோடர், கமரா, லெதர் பாக், வோக்மன், ஸ்கூல் பாக், ரீசேட், மென்பந்து, குடை என்பன பரிசாகப் பெறலாம்.

இறுதி சீட்டிழுப்பிற்கு
2 கதவு குளிர்சாதனபெட்டி, 14" ரீ. வி., வாசிங்மெசின்
ஒரு ரூபா BINCO ரொபி பாக் 10 எடுப்பவர்களுக்கு ஒரு பாக் இலவசம்

விவரங்களுக்கு:
558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[67623]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணவில்லை

ஜே. சி. இன சிவப்பு நிற கறவைப் பசு 19-7-99 இல் காணாமற்போய் விட்டது. வளைந்த பட்டிபார்த்த கொம்பும் K.S. என்ற குறியும் உடையது கன்று ஈன்று ஒரு மாதமாகும். இதனைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத் தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருவாட்டி கமலாதேவி அருளானந்தம் 42/7, கந்தப்பசேகரம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (67608)

### தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்லவிலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம் (19, முருகேசர் ஒழுங்கை நல்லூர் வீடியோ சென்ரர், வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67579)

### தவறிவிட்டது

திருமதி சுந்தரலிங்கம் சறோஜினி என்பவரது தேசிய அ. அட்டை (505250400V), விசேட அ. அட்டை, தொழில் அ.அட்டை என்பன 20-7-99 இல் 751, இல. இ.போ.ச பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். போதனாவைத்திய சாலையிலோ அல்லது இல. 9, முருகேசர் லேன், நல்லூர். என்ற முகவரியிலோ ஒப்படைத்துதவவும். ((67610)

### விற்பனைக்கு

நல்ல நிலையில்உள்ள லிஸ்ரர் (England — 10KV) செல்வ்ஸ்ராட் மொடல் எஞ்சினும், றொபின் (Japan — 1100) எஞ்சினும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜன் பஸ் நிலையம். அச்சுவேலி. (67596)

## தேவை

அனுபவமுள்ள
விற்பனையாளரும்
இரவு பாதுகாவலரும்
தேவை.
நேரில் வரவும்.

**தேனுஜன்ரேடர்ஸ்**
அச்சுவேலி.
(67614)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

## அறிவித்தல்

கடல் வள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கென ஒதுக்கப்பட்ட யாழ்ப்பாணம் - அராலி - வட்டுக்கோட்டை வீதியில் 4 ஆவது மைற்கல் கல்லுண்டாய் பிரதேசத்தில் வீதிக்குத் தெற்குப் புறமாகவுள்ள காணியில் அத்துமீறி மண் எடுத்தல், சிற்பி அகழ்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இவ் ஒதுக்கப்பட்ட பிரதேசத்திற்குள் உட்பிரவேசித்தல் / வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பனவும்தவிர்க்கப்படல் வேண்டும்.

**பதிவாளர்**
(சி/8254)

### வீட்டுச் சேத உதவி

# 196 குடும்பங்களுக்கு 2 ஆம் கட்ட கொடுப்பனவு

வலிமேற்கு, ஜூலை 22

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 196 குடும்பங்களுக்கு சேதமடைந்த வீடுகளைத் திருத்தியமைத்ததற்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஆயிரத்து 500 ரூபாவுக் குட்பட்ட வருமானத்தையுடைய குடும்பங்களின் சேதமடைந்த வீடுகளுக்கு வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையினரால் 25 ஆயிரம் ரூபா நன்கொடை வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ்வலிகாமம் மேற்கு பிரதேசசெயலர் பிரிவில் உள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் சேர்ந்த ஆயிரத்து 519 குடும்பங்களுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. அவற்றில் வீடுகளைத்திருத்தியமைத்த 196 குடும்பங்களுக்கே இரண்டாம் கட்டக் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான காசோலை யாழ். செயலக புனர்வாழ்வுக் கிளையில் இருந்து கிடைத்துள்ளதாகவும் —

சிபார்சு செய்யப்பட்டவர்களின் விவரங்களை கிராம உத்தியோகத்தர்களிடம் பார்வையிட்ட பின்னர் வங்கிகளுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் —

பிரதேச செயலர் கா. சந்திரராசா தெரிவித்தார்.

திட்டமிடல் பகுதியினர் காசோலைகளை வங்கிகளுக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-175)

## கூட்டம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள திணைக்களப் பிரதிநிதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டுபிரமாண அடிப்படையிலான மூலதனநிதிமூலம் மேற்கொள்ளப்பட இருக்கும் வேலைத்திட்டங்கள் தொடர்பான முக்கிய விடயங்கள் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதால் சகல திணைக்கள பிரதிநிதிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-180)

# திருத்தப்படவுள்ள வீதிகள் விவரம் சேகரிப்பு

வலி. தென்மேற்கு, ஜூலை 22

யாழ். மாவட்டத்தில் தார் வீதிகள், கிரவல் வீதிகள் முன்னுரிமைப் பிரகாரம் இவ் வருடம் திருத்தப்படவுள்ளன.

இதற்கான பட்டியலை யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேசசபைத் தவைவர்கள் யாழ் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மேற்படி வீதித் திருத்த வேலைகளுக்கு 10 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே. (ஐ-185)

# 103 பயனாளிகளுக்கு ஐ. நா திட்டம் கடன் உதவி

வலி. கிழக்கு, ஜூலை 22

வலி. கிழக்கு அச்சுவேலி வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட 103 பயனாளிகளுக்கு ஐ. நா. அபிவிருத்தித்திட்ட நிறுவனம் இச்சங்கம் ஊடாக 17 லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

விவசாயம் செய்யும் 46 பயனாளிகளுக்கும், கோழிவளர்ப்பில் ஈடுபடும் 26 பயனாளிகளுக்கும், தையல் மற்றும் தனியாக சிறு தொழில்களை ஆரம்பிக்கும் பயனாளிகளுக்குமே மொத்தம் 17 லட்ச ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. (ஐ-180)

## பிரதேச சபைக்கு இலச்சினை

தென்மராட்சி, ஜூலை 22

சாவகச்சேரி பிரதேச சபைக்கான இலச்சினை ஒன்றை வடிவமைப்பதற்கான ஆலோசனைகள் பொதுமக்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தின் கலை, கலாசாரம் பண்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும் சிறந்த இலச்சினை வடிவத்துக்கு பரிசில் வழங்கப்படுமெனவும் —

இலச்சினை தயாரிப்புக்களை ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு —

பிரதேச சபைத் தவிசாளர் அன்ரன் பொன்னையா அறிவித்துள்ளார். (ஐ-117)

## சந்தைக்கு பனாட்டு

தென்மராட்சி, ஜூலை 22

சாவகச்சேரி சந்தைக்கு பனாட்டு விற்பனைக்கு வரத் தொடங்கியுள்ளது. நேற்று ஒரு சோடி பனாட்டுத் தட்டுகள் ஏட்டு ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன. (ஐ-117)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி ம. கொ. மகேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் யோசப் செல்லத்துரை**

காலமானதையிட்டு இன்று நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரை இழந்து நிற்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.
(67617

## வாசகர் திருமுகம்

# நெடுந்தீவிலிருந்து கால்நடைகள் அனுப்புவதில் ஏகபோகம் ஏன்?

தீவுப்பகுதி இராணுவ நடவடிக்கைகளின் பின் நெடுந்தீவில் இருந்து கால்நடைகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்தத் தடை காரணமாகக் கால்நடைகளால் கிடைக்கக்கூடிய பெருந்தொகைப் பணத்தை இங்குள்ள கால்நடை வளர்ப்பவர்கள் இழந்திருந்தனர். கால்நடை வளர்ப்புத் தொழிலும் பயனற்ற ஒன்றாகவே காணப்பட்டது.

கால்நடைகளை வெளியூர்களுக்கு எடுத்துச் செல்வதில் உள்ள தடையால் மக்கள் படும் கஷ்டங்கள் பல தடவைகள் பல்வேறு மட்டங்களிலும் எடுத்துக் கூறப்பட்டது. யாழ். அரச அதிபரும் ஏனைய திணைக்களத் தலைவர்களும் கடந்த ஆண்டில் இங்கு வருகை தந்த போது கால்நடை வளர்ப்போர் சங்கம் உட்படப் பொதுமக்கள் ஏற்றுமதித் தடையால் எழுந்துள்ள கஷ்டங்கள் குறித்து முறையிட்டனர்

எனினும் தடை தொடர்ந்து இருந்து வந்ததால் மக்கள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டதை அடுத்து அவர் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தி இந்தத் 'தடையை' நீக்க ஏற்பாடு செய்துள்ளார். அது தொடர்பாக 'உதயன்' பத்திரிகையிலும் செய்தி வெளியாகி இருந்தது.

தடை நீக்கம் செய்யப்பட்டும் அதனால் தமக்கு எவ்வித பயனும் இல்லையெனவும் வழமையான கஷ்டங்களுடன் மேலும் சில தொல்லைகளை இப்போது சந்திக்க வேண்டியுள்ளதாகக் கால்நடை வளர்ப்போர் இப்போது கூறுகின்றனர். கால்நடை வளர்ப்போர் சங்கமோ அல்லது கால்நடை வளர்ப்போர் தனிப்பட்ட முறையிலோ கால்நடைகளை வெளியிடங்களுக்கு அனுப்பமுடியாத நிலையில் உள்ளனர்.

அதிகாரத்தில் உள்ள தரப்பினரில் சிலர் தாங்களே கால்நடைகளை அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றனர். அவர்கள் தமது ''வல்லமையைப்'' பயன்படுத்தியும் 'காசு பின்பு' என்ற சொற்பதத்தைப் பிரயோகித்தும் ஏகபோக உரிமை கொண்டாடுகிறார்கள். சில சமயங்களில் உரிய பெறுமதியிலும் பார்க்க 25 சதவீதமான பணத்தையே கொடுத்தும் கால்நடைகளை வாங்கி அனுப்புகின்றனர்.

வெளியூர் கொண்டு செல்லப்படும் கால்நடைகளைப் படகில் ஏற்றும்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. கால்நடைகள் ஏற்றப்படும் போது கிராம அலுவலர் மற்றும் கால்நடை வளர்ப்போர் முன்னிலையில் அது இடம்பெற வேண்டும் என்பது காலங்காலமாக இருந்துவரும் நடைமுறை ஆகும். கால்நடைகளைக் களவாக ஏற்றிச் செல்வதைத் தடுக்கும் பொருட்டு முன்பு இது கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

கடந்த வாரத்தில் கால்நடைகள் வெளியூர்களுக்கு அனுப்பப்பட்ட பின்னர் சில பகுதிகளில் ஆடு மாடுகள் காணாமற் போயுள்ளது தெரியவந்திருக்கிறது.

குதிரைகளை இங்கிருந்து தெளியூருக்கு எடுத்துச் செல்லக்கூடாதெனச் சட்டம் இருக்கிறது. எனினும் கடந்த வாரம் அனுப்பப்பட்ட கால்நடைகளுடன் இரண்டு குதிரைகளும் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது.

கால்நடைகளை வெளியூருக்கு அனுப்பும் விடயத்தைச் சம்பந்தப்பட்டோர் கால்நடை வளர்ப்போர் சங்கத்திடம் அதனை விட்டுவிடுவதே நியாமானது.

''மக்கள் நலன் விரும்பி''

நெடுந்தீவு.

# சில்லாலையில் களவுத் தொல்லை

சில்லாலை வடக்கு, மேற்குப் பகுதிகளிலுள்ள ஆள்கள் இல்லாத வீடுகளில் உள்ள பெறுமதிமிக்க பொருள்கள் ஆள் அரவம் அற்ற நேரங்களிலும், இரவுநேரங்களிலும் காட்டுமிராண்டித்தனமானமுறையில்கொள்ளை யிடப்படுகின்றன. வீட்டின் ஓடுகள், அஸ்பெஸ்ரஸ் சீற்றுகள், வீட்டு மரங்கள், தகரங்கள், கிறில்கள், கதவு நிலைகள், கதவுகள், யன்னல்கள், மலசலகூட பிளேற்றுகளை மக்கள் குடியிருந்த வீடுகள் என்றும் பாராமல் கொள்ளையிடுகின்றார்கள்.

சில பொது அமைப்புக்கள் கொள்ளையருக்கு ஊக்கமளிக்கும் வகையில் நடந்து கொள்கின்றன என்றே கூறவேண்டியுள்ளது. சூறையாடிய பொருள்களைத் தாம் விலை கொடுத்து வாங்கியதாக பொது அமைப்புக்களிடம் கூறி விற்றுப் பணமாக்குகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது.

குறிப்பிட்ட கிராமம் ஒன்றைச் சேர்ந்தவர்களே சிறு குழுக்களாகச் சேர்ந்து களவையே தொழிலாகக் கொண்டு செயற்படுகின்றார்கள். இது பற்றி பாதிக்கப்பட்ட பொதுமக்கள் உதவி அரசாங்க அதிபரிடமும், சில பொது அமைப்புக்களிடம் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இல்லை. சில்லாலை மக்கள் மனம் வெதும்பிய நிலையில் உள்ளார்கள். இனியாவது விமோசனம் கிடைக்குமா எனக் கேட்கிறார்கள்.


ஜி. ஞானப்பிரகாசம்

சில்லாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில் - ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்பிதழ்



22-07-1999

## அன்னையின் ஆலய வரலாறு

கற்பக வளஞ் சுரக்கும் கருணை நாயகியே போற்றி
நற்பத நலஞ் சுரந்து நாயேனை யாண்டாய் போற்றி
பொற்புயர் கொக்கூர் மேவும் புவன நாரணியே போற்றி
அற்புத சாயி துர்க்கை யம்மையே போற்றி! போற்றி!!

இந்துக்களிடையே சக்தி வழிபாடு மிகப் பலம் வாய்ந்த வழிபாடாக இருப்பதால், இலங்கையின் வடபுல யாழ்ப்பாணத்திலும் அதனைச் சூழவுள்ள தீவுப்பகுதிகளிலும் பிரசித்திபெற்ற பல அம்மன் ஆலயங்கள் ஆதிகாலந்தொட்டு அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய ஆலயங்களில் கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயமுமொன்று. மிகப் பழங்காலந்தொட்டு கொக்குவில் வாழ் இந்துக்கள், கொக்குவில் கோணாவளைப் பகுதியில் திரு. அ.க. வேலாயுதபிள்ளை அவர்களின் காணியில் காணப்பட்ட வேப்ப மரத்தடியில் வைரவ சுவாமியும் காளி அம்மனும் குடியிருப்பதாக உணர்ந்து, அவ்விடத்தினை வணங்கி வரத் தொடங்கினர்.

1983 ஆம் ஆண்டளவில், இப்பக்தர்கள் அவ்விடத்தில் அம்மனுக்கு ஆலயமொன்று அமைத்து வணங்க விரும்பினர். இவ்வாலய நிர்மாணிப்புக்கு காணி தேவைப்பட்டமையால், இக்காணியின் உரிமையாளர் தமது குடும்பக் காணியின் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்கினார். திருவுளச் சீட்டின் மூலம் துர்க்கை அம்மன் ஆலயம் ஸ்தாபிக்க முடிவு செய்யப்பட்டு, ஆலய நிர்மாணிப்புக்கென பரிபாலன சபையொன்றும் உருவாக்கப்பட்டது. உள்ளூரிலும் பிற இடங்களிலும் மற்றும் பிறநாட்டிலுமுள்ள அம்பாள் அடியார்களின் நிதியுதவியுடன் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயத்தின் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம், 01—07—84 இல் நவாலியூர் பிரதிஷ்டா சிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின் தலைமையில் நடைபெற்று, ஆண்டு தோறும் ஆனிப்பூசத்தை ஆரம்ப நாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது.

கால ஓட்டத்தில், இவ்வாலயமும் மெல்ல மெல்ல வளர்ந்து தனது பன்னிரண்டாவது ஆண்டுப் பூர்த்தியுடன் 1997 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பாலஸ்தானம் செய்து கொண்டது. 08—06—97 இல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆடிமாதப் பௌர்ணமி தினத்தை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 1997 ஆம் ஆண்டு தொடக்கம் மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது. இம் மஹோற்சவத்தின்போது இரதோற்சவம் பொது உபயமாக நடைபெற்று வருவதால், எல்லா நிலையிலுமுள்ள பக்தர்களும் இதில் பங்கேற்க வசதியாக இருப்பது இவ்வாலயத்தின் சிறப்புத்தன்மை. ஆரம்ப காலத்தில் காலை, மாலையென இருவேளைப் பூசைகள் நடைபெற்று வந்து 1997 இல் நடைபெற்ற மஹா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து காலை, மதியம், மாலையென மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன.

கடந்த இரண்டு வருடங்களாக இரதோற்சவத்தின்போது, பிற ஆலயமொன்றில் இரவலாக எடுக்கப்பட்ட தேரில் அம்பாள் வீதியுலா வந்துள்ளார் அம்பாளுக்குச் சித்திரத்தேர் ஒன்று அமைக்க அருள் கிடைத்தமையால், சென்ற ஆண்டின் இரதோற்சவத் தினத்தன்று சித்திரத் தேருக்கான ஆரம்ப வேலை தொடங்கப்பட்டது. திருநெல்வேலியைச் சேர்ந்த கலாபூஷணம் ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரி அவர்களின் கைவண்ணத்தால் உருவாக்கப்பட்ட சித்திரத்தேரில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி பவனி வர விருப்பது, அதனைக் குறுகிய காலத்தில் உருவாக்கிய ஸ்தபதி அவர்களினதும், அவரின் குழுவினரதும் மற்றும் நிதியுதவி பொருளுதவி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அம்பிகை அடியார்களே!

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டு மன நிறைவடைகின்றோம். ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்களில் சிறப்பாக நடைபெறுவது தேர்த்திருவிழா. ஆன்மாக்களை காத்தருளும் பொருட்டு இறைவன் தேர் ஏறி அருள் புரிகின்றான். தேருடைய அமைப்பு, நிறைந்த தத்துவக் கருத்துகளைக் கொண்டது. மூன்று உலகங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக அமைந்துள்ளது. தேரை வடம் பிடித்து இழுப்பது மனித வாழ்வில் புண்ணியப் பேற்றைத் தரக்கூடியது. இத்தேரை உருவாக்கும் சிற்பக் கலைஞர்களை தேவசிருஷ்டிகள் என அழைப்பர். தேரை உருவாக்கியிருக்கும் கலைஞர் சிற்பச்சக்கரவர்த்தி ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்கள் இந்த நாட்டின் எல்லா ஆலயங்களிலும் தேரை உருவாக்கி தனித்துவத்தைப் பெற்றுள்ளார். அவரின் திறமையால் உருவாக்கப்பட்டுள்ள தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெற்று துர்க்காதேவிக்கு சமர்ப்பணமாகும் நாள் புனிதமான நாளாகும். இத்தேரை உருவாக்கிய கலைஞர்களுக்கும் ஆலய அறங்காவலர் சபையினருக்கும் ஆலய சிவாச்சாரியார்களுக்கும் கொக்குவில் வாழ் மக்களுக்கும் இறைவன் அருள் புரியப் பிரார்த்திக்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

## துர்க்காதுரந்தரியின் ஆசியுரை

''சொந்தமான துர்க்கை அம்மா
இந்த நாள் முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றுந்
தங்குவாய்'',

என்பது துர்க்கை அடியார்கள் உருகி உருகிப் பாடும் அருட்பாடலாகும். கொக்குவில் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீசாயி துர்க்கா தேவிக்கு வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகி நடைபெறுவது குறித்து ஆனந்தமடைகிறேன். அத்துடன் சித்திரத்தேர் வெள்ளோட்டம் இடம் பெறுவது மேலும் உளப்பூரிப்பை ஏற்படுத்துகிறது.

அன்னையின் அருளணைப்பில் அகில உலகமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. எதற்கும் துர்க்கா! எதிலும் துர்க்கா! எல்லாம் துர்க்கா! என்று எமது உள்ளம் ஓயாது ஒலித்துக் கொண்டே இருக்கிற காலம் இந்தக் காலம். மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், இங்கிலாந்திலும், கனடாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் துர்க்கை அம்பாளுக்குக் கோயில் கட்டி குடமுழுக்குச் செய்திருக்கிறார்கள் எமது சைவ மக்கள் என்பதை நாம் அறிந்து பூரிப்படைகிறோம்.

ஆகவே, எமது மண்ணில் ஏற்பட்டிருக்கிற அவலங்கள் அகலவும் அன்பு வெள்ளம் பெருகவும் அன்னை துர்க்கா தேவியை வழிபட்டு உய்தி அடைவோமாக!

''துர்க்கா சரணம் சரணம் தாயே''

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## ஸ்தபதியின் செய்தி

எல்லாம் வல்ல எம்பிராட்டியின் திருவருள் துணைகொண்டு துர்க்கை அம்பாளுக்கு அழகிய சித்திரத்தேர் உருவாகியிருக்கிறது. எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களின் ஒன்றிணைந்த வடிவமாக தேர் காணப்படுகிறது. தேரை ஊர் கூடி இழுப்போம் என்பதிலிருந்து ஒரு சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் படைப்பாகவும் தேர் விளங்குகிறது.

படைத்தல் என்பது ஒரு புத்துருவாக்கான செயன்முறையாகும். இச்செயல் முழுமையடையாதவரை முடிவுப் பொருளான கலை பற்றி எதுவும் கூறமுடியாது.

கலைப்பொருள் ஒன்றைப் படைத்தல் என்பது, சிற்பம் ஒன்றினை செதுக்க வேண்டும் என நினைத்துக் கொண்டு அதற்குப் பொருத்தமான மரத்துண்டை தேடித் திரிவதை ஒத்ததல்ல. மாறாக, மரத்துண்டை கண்ட பொழுதில் அதில் உருவம் ஒன்றை செதுக்க முடியும் என கண்டுகொள்வதை ஒத்தது.

நாம் வாழ்வில் வலிந்து தேடிக்கொள்ள வேண்டியது திருவருளே. மனிதப் பிறவி அரியதாக கிடைத்தது. அதனை முழுமையாகப் பயன்படுத்தி எமது உள்ளங்களை இறைவன் வாழும் கோயிலாக்குவோம்.

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்கையம்பாள் இச் சித்திரத்தேர் இவர்ந்து எல்லா நலனும் பாலிக்க வேண்டும் என்று மனமொழி மெய்பால் வேண்டுகின்றேன்.

''அன்பர்பணி செய்யவென ஆளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும்
பராபரமே''

கலாபூஷணம் [illegible]
ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரியார்
ஆறுமுகம் சிற்பாலயம்.

## அன்னைக்கு ஒரு சித்திரத் தேர்

கொக்குவில் கிழக்கில் கோயில்கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கெல்லாம் அருள் பரிபாலித்துக் கொண்டிருப்பவள் உலகத்து அன்னை ஸ்ரீசாயி துர்க்காதேவி. அந்த உலக மாதாவுக்கு அழகிய சித்திரத்தேர் ஒன்று உருவாகியுள்ளது என்பது மிகவும் பெருமைக்கும் மகிழ்ச்சிக்குமுரிய செய்தியாகும்.

ஆலயம் சிறியது தான். ஆனால் அங்கு வீற்றிருக்கும் சாயி துர்க்காவின் புகழோ மிகப் பெரியது. கேட்டவர்க்கெல்லாம் நல்ல வரம் கொடுத்து அபயம் அளிப்பதில் அன்னைக்கு ஈடு அன்னையே!

திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய கலாபூஷணம் ஜீவரட்ணம் அவர்களது கைவண்ணத்தில் உருவாகியது இச் சித்திரத்தேர். சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவில் அம்பாளின் அடியார்கள் பெருமளவில் கலந்து சிறப்பித்து நல்லருள் பெறுவோமாக.

து. வைத்திலிங்கம்
தலைவர்
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம்.

## ஆலயப்பிரதம குருவின் ஆசியுரை

ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தின் இன்றைய சித்திரத்தேர் வெள்ளோட்ட வைபவத்தின்போது எல்லாம் வல்ல உலக மாதாவாகிய ஸ்ரீசாயி துர்க்காதேவியின் அருட்பிரவாக வெள்ளத்தில் நாம் அனைவரும் மூழ்கி மகிழ்ச்சிப் பெருக்கால் புளகாங்கிதம் அடைகின்றோம். யாரும் எதிர்பாராவண்ணம் மிக மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்தும் மஹோற்சவம் நிகழ்வதுமல்லாமல், மூன்றாம் ஆண்டு மஹோற்சவத்தில் புதிய சித்திரத்தேர் அமைந்ததும் கொடிமரம் துவஜஸ்தம்பம் புதிய கவசங்கள் இந்திய நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு துவஜாரோகணம் நடைபெறுவதும் அன்னையின் அருளாட்சியன்றோ. இச் சந்தர்ப்பத்தில் ஆலய பரிபாலன சபையினரின் விடா முயற்சியும் ஊக்கமும் அடியார்களின் நிதி மற்றும் உதவிகளும் போற்றுதற்குரியது மிகக் குறுகிய கால இடைவெளியில் சித்திரத்தேரை அமைத்துத் தந்த ஆறுமுகம் சிற்பாலயத்தினருக்கும் முதன்மையாக கலாபூஷணம் திரு ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி அவர்கட்கும் மற்றும் தோன்றாத் துணையாக நின்று சகல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த அனைவருக்கும் அன்னை துர்க்காதேவியின் அருள் வேண்டிப் பிரார்த்தித்து சகலருக்கும் ஆசி வழங்கி அமைகின்றேன்.

முத்தமிழ்க் குருமணி
சிவஸ்ரீ க. குகதாஸக் குருக்கள்
ஆலயப் பிரதமகுரு

## செயலாளரின் நன்றி உரை

ஸ்ரீ சாயி துர்க்கை அன்னையின் பொற்பாதம் பணிந்து இன்று நடைபெறும் இந்த சித்திரத்தேர் வெள்ளோட்டத்தால் என் மனம் பூரிப்படைவது மட்டுமன்றி ஆலயச் சமுதாயமே உவகை அடைந்து நிற்கின்றது. இன்றைய இந்த நிகழ்வு நடைபெறுவது அட சராசரங்களை ஆள்கின்ற அன்னை துர்க்காவின் செயல் என்று கூறுவது மிகையாகாது.

தேர்த்திருப்பணிக்காக நாம் நிதி உதவி வேண்டி நின்றபோது தாயகத்தில் வாழும் அடியார்களும், அன்பர்களும் மட்டுமல்ல கடல் கடந்து வாழும் அன்னையின் அபிமானிகளும் பெருந்தொகையான நிதியுதவியைத் தந்து ஊக்கமளித்தார்கள். அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

மிகவும் குறுகிய காலத்தில் இந்த அழகிய சித்திரத்தேரை வடிவமைத்துக் கொடுத்த ஸ்தபதி ஜீவரட்ணம் ஆச்சாரி அவர்கட்கும் அவரது உதவியாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் மற்றும் இன்றைய வெள்ளோட்ட நிகழ்விற்கு எமது அழைப்பை ஏற்று வருகை தரும் பெரியோர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இத்தேர்த்திருப்பணிக்கு சகல வழிகளாலும் உதவிய அனைத்து அடியார்கள், அன்பர்களுக்கு மீண்டும் மீண்டும் அன்பு கலந்த நன்றியை பரிபாலனசபை சார்பாக தெரிவித்துக்கொண்டு அனைவருக்கும் ஸ்ரீசாயி துர்க்காதேவியின் அருட்கடாட்சம் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சு. பரமேஸ்வரன்
செயலாளர்
ஆலய பரிபாலன சபை

(சி/8233)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற் பொருள் உற்பத்தி சங்கத்தை வதிரியில் அமைப்பதற்கு முயற்சி

அரியாலை. ஜூலை 22 வடமராட்சி வதிரியில் தோற்பொருள்கள் தயாரிப்பு உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைப்பதற்கான முன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுமார் 25 தொழிலாளர் சேர்ந்து அந்த தோற்பொருள்கள் தயாரிக்கும் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள தலைமை அலுவலக பரிசோதகர் எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் இந்த தொழிலாளர்கள் தோலில் பொருள்கள் எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றி பயிற்சி பெற்றுள்ளனர்.

பயிற்சியை முடித்துக் கொண்ட இந்தத் தொழிலாளர்கள் 25 பேரும் தற்போது தோற் பொருள்கள் தயாரிக்கும் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-17)

## கடைகளில் திடீர் சோதனை

# காலாவதியான பொருள்கள் முகமாலையில் அழிப்பு

பளை முகமாலையில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினரால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான பல பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

பளை பொது சுகாதாரப் பரிசோதகர் ச. சாந்தமூர்த்தி தலைமையில் நடத்தப்பட்ட இப்பரிசோதனையில் ஜாம், பிஸ்கட், கோடியல் உட்பட பத்து வகையான உணவுப் பொருள்கள் காலாவதித்திகதி முடிவடைந்த பின்னரும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததால் அவை கைப்பற்றப்பட்டு பொதுமக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

[ஐ-117[

## மீனவர் பலி

திருகோணமலைக் கடற்பரப்பில் சம்பூர் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது நேற்று முன்தினம் காலை கடற்படையினர்மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

அவரின் சடலம் அடையாளம் காண்பதற்காக மூதூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நேர்முகப் பரீட்சை

உதவி வைத்திய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பில் உள்ள சுகாதாரத் திணைக்கள தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் கடந்த 20 ஆம் திகதி உதயனில் வெளியாகியுள்ளன. (க)

---

உ

# தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிரமாதி வருடம் ஆனி மாதம் 30 ஆம் நாள் (14 - 07 - 1999) புதன்கிழமை சிவபதமடைந்த எமது பெரியதாயார்

## வெங்கடேசக்குருக்கள்-மீனாட்சி அம்மா

அவர்களின் ஆத் சாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

தசாகம் ஆடி மாதம் 7 ஆம் நாள் 23 - 07 - 1999 வெள்ளி, காலை 10 மணியளவிலும்
ஆடி 8 ஆர் நாள் 24-07-1999 சனி, ஏகோதிஷ்டம்-மாசிகம்
ஆடி 9 ஆம் நாள் 25-07-1999 ஞாயிறு, சபிண்டீகரணம்
ஆடி 10 ஆம் நாள் 26-07-1999 திங்கள், கிருகயக்ஞம் சமாராதனை

ஷை கிரியைகளில் தாங்கள் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு திங்கட்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்,

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்.

கும்பழாவளை,
அளவெட்டி.

[67604]

---

# தேவை

பயிற்சி நிறுவனம் ஒன்றுக்கு

♣ கேக் ஐசிங், முடியலங்காரம், பூவேலை, Fabric Painting பயிற்றுவிக்கக் கூடிய ஒருவர்,

♣ நிறுவன பொதுப்பணியாளர் ஒருவர்

தேவைப்படுகிறார்கள்.

24-07-99 சனி நேரில் வரவும்.

– நிர்வாகி

**தூரிகை**

சட்டநாதர் கோயிலடி,
நல்லூர்.

(சி/8253)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**பேராசிரியர்**

## அ. துரைராசா தங்கப்பதக்கம்

மேற்படி பதக்கங்களை வழங்கும் பொருட்டு, எதிர்வரும் ஐப்பசிமாதம் 06ஆம் திகதி நடைபெறவிருக்கும், 1998ஆம் ஆண்டிற்கான பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவிருக்கும் 1ஆம், 2ஆம் வகுப்பில் சித்தியடைந்தோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பல்துறைத் திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கான இப்பதக்கங்கள் கல்வியிலும், விளையாட்டிலும் ஏனைய சிறப்புச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈட்டிய தேர்ச்சிகளை மதிப்பீடு செய்து வழங்கப்படும்

பல்கலைக்கழகத்துக்கென ஒரு பதக்கமும். ஒவ்வொரு பீடத்திற்கும் ஒவ்வொன்றாக ஐந்து பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை (01) உதவிப் பதிவாளர்/ கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் (02) சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம், வவுனியா ஆகிய முகவரிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை உதவிப் பதிவாளர்/ கல்விக்கிளை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 1999-08-31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

– பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1999-07-20

(சி/8252)

---

# அறிவித்தல்

வட. இலங்கை சங்கீத சபையின் ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றும் இதுவரை ஆசிரிய நியமனம் பெறாதவர்கள், 24 - 07 - 1999 சனிக்கிழமை காலை 9. 30 மணியளவில் நல்லூர், சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவிருக்கும் நியமனம் பற்றிய கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

செயலாளர்
இளங்கலைஞர் மன்றம்
நல்லூர்.

(67609)

---

# வெளிவந்து விட்டது

**புதிய ராணி காமிக்ஸ்** விற்பனையில்

1) மரணக் கிணறு
2) பேய்க் குதிரை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**பாலன் புத்தக நிலையம்**

87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்)

(67618)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் எனக்காக தேவனை வேண்டுங்கள்"



## அமரர் வ. செல்லத்துரை

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் காணிப்பதிவு கந்தோர், யாழ்ப்பாணம்.)

மண்ணில்
5 – 5 – 1923

விண்ணில்
22 – 6 – 1999

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 22 - 7 - 99 வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெறும். அத்திருப்பலியில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால்துயருறும்:
மனைவி ரெஜினா பூமணி,
மக்கள், மருமக்கள், பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரன்.

13, மவுண்காமல் வீதி,
யாழ்ப்பாணம்.

(67586)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி முருகேசு செல்லம்மா

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

எங்கள் உள்ளங்களில் என்றும் நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே அன்பு அம்மா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அம்மாவின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமக்கு வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இன்று (22 - 07 - 99) 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பூசையிலும் கலந்து கொள்பவர்களுக்கும் எமதுநன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி.

மு. வைத்திலிங்கம்
சடையாளி, காரைநகர்.

திருநகர்,
கிளிநொச்சி.

(67597)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## வலமும் இடமும்

அதிகாரப் பரவலாக்கம் — அதிகாரங்களைப் பகிர்வது — சிறுபான்மை இனங்களுக்கோ அல்லது வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கோ மாத்திரம் தேவையானது அல்ல. நாட்டின் சகல பகுதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு அதிகாரப் பகிர்வு தேவைப்படுகிறது. இலங்கையில் உள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அதிகாரப் பரவல் அவசியமாகிறது.

அரசமைப்பு, நீதி, இன விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், கல்கிசையில் நடைபெற்ற ''அதே இடத்தில் சேவை'' நிகழ்ச்சியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இதன் மூலம் அவர் ஓர் உண்மையை வெளிப்படுத்தி உள்ளார். அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் யோசனை தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விசேட திட்டம் அல்ல. நாட்டைப் பரந்த அளவில் அபிவிருத்தி செய்வதற்கு உதவும் வகையில், அதிகாரத்தை முற்று முழுதாகக் கொழும்பில் கட்டி வைத்துக் கொண்டிருக்காமல், அங்கேயே தேக்கி வைக்காமல், மாகாண அல்லது பிராந்திய மட்டங்களுக்கும் பகிர்வதே அதிகாரப் பரவல் என்று அமைச்சர் ''விளக்கி'' உள்ளார்.

நல்லது, அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு, அதிகாரத்தைக் கொழும்பிலிருந்து மாகாணங்களுக்கு அல்லது பிராந்தியங்களுக்குப் பகிர்வது சிறந்த முறையே, ஆனால் தமிழர்கள் அதிகாரப் பரவல் அதிகாரத்தையா தமது அரசியல் உரிமைகள் என்று கேட்டார்கள்.

தாம் இந்த நாட்டின் ஒடுக்கப்பட்ட இனமாக, இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ விரும்பவில்லை. அதனால் தமது அலுவல்களைத் தாமே நிர்வக்கிக்கவும் தமது விதியைத் தாமே நிர்ணயிக்கவும் வகை செய்யும் அரசியல் அதிகாரங்களையே ஆரம்பத்தில் இருந்து தமிழர்கள் கேட்டு வருகிறார்கள். வெறும் அபிவிருத்தி அதிகாரத்தை அல்ல.

மொத்தத்தில் தாம் சுய கௌரவமும் சுய உரிமையும் உள்ள, எந்த வகைக் கட்டுப்பாட்டுக்கும் உட்படாத, உண்மையான அரசியல் சுதந்திரம் பெற்ற மக்களாக வாழ்வதற்கான அரசாட்சி முறை தேவை என்பதனையே தமிழர்கள் கடந்த 45 வருடத்திற்கு மேலாகக் கேட்டு வருகிறார்கள்.

சாத்விகப் போராட்டங்களும் ஆயுதப் போராட்டமும் நடத்த அவர்கள் புறப்பட்டது, சுயாட்சி உரிமை தேவை என்ற அடிப்படையான அரசியல் அபிலாசையை முன்வைத்தே ஆகும். தமிழர்களின் அந்த அரசியல் அபிலாசைகளை, வெறும் அபிவிருத்திக்கான அதிகாரத்தைக் கொடுப்பதன் மூலம் ஈடு செய்ய அரசாங்கம் நினைக்கிறது!

வடக்கு — கிழக்கு மாகாண மக்கள் கேட்ட அரசியல் உரிமை இதுதான் என்பது போல அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறை முழு நாட்டுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசோ இப்போது, நாடு முழுவதற்கும் பொதுவாக அபிவிருத்தி அதிகாரத்தைப் பங்கிட்டு தமிழ் மக்களின் அரசியல் அதிகாரக் கோரிக்கையை ஈடு செய்ய எண்ணுகிறது.

அதனையே, அதிகாரப்பரவலாக்கல் முழு நாட்டின் அபிவிருத்தியையும் நோக்கமாகக் கொண்டது என்ற அமைச்சர் பீரிஸின் விளக்கம் விரித்துரைக்கிறது. முந்தியது வலமிருந்து இடம் என்றால் இப்போதையது இடமிருந்து வலமானது. அவ்வளவே வித்தியாசம்!

# மன்னாரில் இராணுவத்தினரின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துக

## வன்னி எம். பி. படை அதிகாரிக்கு கடிதம்

மட்டக்களப்பு, ஜூலை 22

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தின் அத்துமீறல் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் இராணுவ இணைப்பதிகாரியைக் கேட்டுள்ளார்.

மன்னார் கீரியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக இராணுவம் மேற்கொண்ட பதில் நடவடிக்கைகள் காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கி இராணுவ இணைப்பதிகாரிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

''இராணுவத்தினரின் அத்துமீறல்கள் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பொதுமக்கள்— இராணுவ உறவுகளில் இடைவெளி ஏற்படுகின்றது. இந்நிலையில் இராணுவத்தின் பதில் நடவடிக்கைகளில் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருப்பது உறுதிப்படுத்தப்படவேண்டும் — என அவர் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

[ஐ-21]

## கருத்தரங்குக்கு ஏற்பாடு

தென்மராட்சி, ஜூலை 22

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் மீண்டும் முழுநிலாக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. சமூகத்தில் இனங் காணப்படும் பிரச்சினைகள் சம்பந்தமாக கல்வி மான்களால் சொற்பொழிவுகள் மாதாந்தம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுவதாக கழகச் செயலாளர் லயன் வி. வி. மகாலிங்கம் தெரிவித்தார்.

[ஐ-117]

## கூட்டுறவு மாநாடு

அரியாலை, ஜூலை 22

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்களுக்கான மாதாந்த மாநாடு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் தலைமையில் கூட்டுறவுத் திணைக்கள மண்டபத்தில் நடைபெறும்.

(ஐ-17)

## அச்சுவேலி அம்புலன்ஸ் அல்ல

யாழ்ப்பாணம், ஜூலை 22

புத்தூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் சம்பந்தப்பட்ட அம்புலன்ஸ் வண்டி அச்சுவேலி ஆஸ்பத்திரிக்குச் சொந்தமானதல்ல என்று அறிவிக்கப்படுகிறது.

சுப்பிரமணியம் குலேந்திரன் என்ற சிறுவன் காயமுற்ற அந்த விபத்தில் வேறோர் ஆஸ்பத்திரியின் அம்புலன்ஸ் வண்டியே சம்பந்தப்பட்டதாக இப்போது தெரியவந்துள்ளது. அச்சுவேலி ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் என்று 19-07-99 உதயனில் வெளியானது தவறாகும். தவறுக்கு வருந்துகிறோம்.

(அ)

# டுமாலின் மறைவுக்கு புளொட் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

கண்ணிவெடிகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தை 1990 களிலேயே உணர்ந்து அதற்காக செயற்பட்டவர் தோழர் டுமால்.

வவுனியாவில் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட புளொட் உறுப்பினர் சபாரத்தினம் பாஸ்கரனின் (டுமால்) மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து புளொட் அமைப்பு விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

1990 இல் இரண்டாவது ஈழயுத்தம் ஆரம்பிக்கப்பட்ட வேளை அது. பேரழிவை ஏற்படுத்தக் கூடியதென்பதை கழகம் அன்றே உணர்ந்து மக்களுக்கு பத்திரிகை வாயிலாக தெளிவுபடுத்தியது. அதற்காக முன்கூட்டியே திட்டமிட்டு 1990 நடுப்பகுதியில் இருந்தே வவுனியாவில் பணிகளை ஆரம்பித்தது. யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மக்களை அவரவர் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொண்ட வேளை மக்களின் குடியிருப்புநிலங்களில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் பெருந்தடையாகவும், அச்சுறுத்தலாகவும் அமைந்திருந்தது. நிலக்கண்ணிகளால் உயிரிழப்போரும் ஊனமுறுவோரும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தனர். இதைத் தடுத்து நிறுத்தும் பணி முன்னெடுக்கப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இராணுவ இரசாயன தொழில்நுட்ப பிரிவிடம் கழகத்தினால் அவ்வேலைத்திட்டம் ஒப்படைக்கப்பட்டது. அந்தப் பிரிவுக்கு தளபதியாக அமரர் தோழர் டுமால் அவர்களே நியமிக்கப்பட்டிருந்தார். மக்கள் எதிர்நோக்கிய அச்சுறுத்தல்களுக்கு சவாலாக தான் ஏற்றிருந்த பாரிய பொறுப்பினை வேகமாகவும் விவேகமாகவும் செயல்படுத்தி மக்கள் சேவைக்கு முத்திரை பதித்தவர்.

மக்களின் வாழ்விடங்களில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிகளை செயலிழக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தொன்றில் கடுமையான காயங்களுக்கு உள்ளாகி கண்களிரண்டும் பாதிப்புக்குள்ளான போதிலும் சிகிச்சை பெற்ற பின்பு தான் ஏற்றிருந்த பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று யாழ். குடாநாட்டில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்கின்ற வேளை அங்கு புதைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணிகளினால் மக்களும் கால்நடைகளும்கூட பேரழிவுகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

நிபுணர்களும், மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டு மக்களைக்காக்கும் இப்பணியின் மகத்துவம் இன்று அனைவராலும் உணரப்படுகின்றது.

இன்று அனைவருக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள நிலக்கண்ணி விவகாரத்தின் ஊடாக மக்களின் வாழ்விடங்களில் புதைக்கப்பட்டிருக்கும் நிலக்கண்ணிகளை அகற்றலும், செயலிழக்கச் செய்தலும் என்ற தார்மீகப்பணி எத்துணை முக்கியத்துவமானது என்பதை 1990 களிலேயே கழகம் உணர்ந்து கொண்டு செயல்பட்டது என்பதற்கு தோழர் டுமால் அவர்களே சான்றாவார்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# மலசல கூட பாவனைபற்றி மாணவருக்கு கருத்தரங்கு

நெல்லியடி, ஜூலை 22

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு விழிப்புணர்ச்சிக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

ஜீ. ரீ. இசற் நிறுவனம் வடமராட்சிப்பகுதியில் சுமார் பத்து பாடசாலைகளுக்கு மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்திருந்தது.

இந்த மலசல கூடங்களை மாணவர்கள் பயன்படுத்தும் விதம், தொற்று நோயை கட்டுப் படுத்தும் முறைகள் தொடர்பாகவே இக்கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

நேற்று புதன்கிழமை முதல் தடவையாக, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது.

இன்று பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் இக்கருத்தரங்கு, பின்னர் தினமும் வெவ்வேறு பாடசாலைகளில் இடம்பெறும் என பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்தனர்.

[ஐ-109]

# செறிவு குறைந்த மதுசாரம் பெருமளவில் கையிருப்பு

அரியாலை, ஜூலை 22

யாழ்ப்பாணம், கொடிகாமம், பளை, சாவகச்சேரிஆகிய பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 300 போத்தல் செறிவு குறைந்த மதுசாரம் கையிருப்பில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தச் செறிவு குறைந்த மதுசாரத்தின் மூலம் தென்மராட்சி கைதடி கொத்தணி வடிசாலையில் சாராயத்தை வடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

(ஐ-17)

# 75 குடும்பங்களுக்கு வீடு அமைக்க உதவி

வலி. மேற்கு, ஜூலை 22

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் வீடு முழுமையாகச் சேதமடைந்த வருமானம் குறைந்த 75 குடும்பங்களுக்கு ஜி. ரி. இசற் நிறுவனம் வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மூளாய் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 25 வீடுகளும், வட்டு தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 25 வீடுகளும், அராலி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 17 வீடுகளும், பொன்னாலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் 8 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

ஜி. ரி. இசற் நிறுவனம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்களை இலவசமாக விநியோகிக்கவுள்ளது.

(ஐ-175)

## நாளை

ஆடி 07

வெள்ளிக்கிழமை

திதி: தசமி

முற்பகல் 9.45 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

முழுவதும்

சுபநேரம்: 6.02 — 7.32


ராகுகாலம்: 10.32 — 12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

ஒருவருடைய தன்மையை அறியப் பெரிய முயற்சிகள் எதுவுமே தேவையில்லை. அவருடன் சேர்ந்திருப்பவர்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம்.

—அரையனார்



## சாயி சிந்தனை

இறைவன் உன்னுடனேயே நடந்துகொண்டு — உன்னைப் பின்பற்றி — உன்னைக் காப்பாற்றுகிறார். ஒரு பக்தன் இறைவன் தன்னைப் பின் தொடர்கிறார் என்பது சரியா என்று சந்தேகித்தான். பக்தன் தனக்குப் பின்னால் பார்த்தான். இறைவனைக் காணோம். அவன் கடவுளே எனக்குப் பின்னால் நீங்கள் இருப்பதாக வாக்குக் கொடுத்தீரே? என்று கேட்டான் உனக்குப் பின்னால் இருக்கும் கடவுளைக் காண நீ திரும்பினால், அப்போது உனது புதிய நிலைக்குப் பின்னால் தான் இறைவன் இருப்பார். நீ விரும்பியபடி, இறைவன் உனக்குப் பின்னாலேயே (நீ எங்கு திரும்பினாலும், உனக்குப் பின்னாலேயே) இருப்பார்.

ஆதாரம்:
சாயி அருளமுதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யபழ்ப்பாணம்

சீ. விமலநாதன் (107283 ஏ), பீ. செல்வரட்ணம் (107284ஏ), ஏ. சந்தனம்மா (107285ஏ), எஸ்ரி. எம். ஏ. பெனாண்டோ (177285 பீ), எஸ்ரி. எம். மறிஸ்ரெலா (107288ஏ), எஸ். புஷ்பராணி (107289ஏ), என். சற்குண (107293ஏ), ஐ. மாணிக்கம் (107294ஏ), கே. சுந்தரலிங்கம் (107295 ஏ), ஜே. நிக்சன் (107302 ஏ), என். தவரஞ்சனி (107302பீ), எஸ். செல்வேந்திரன் (107303ஏ),

எம். ஆர். ஜே. தேவஞானேந்திரன் (107304ஏ), டபிள்யூ. தர்ஷன் (107304 பீ), பீ. சாந்தப்பிரியா (107310ஏ), ஜே. திரேசம்மா (107310பீ), பீ. நிரோஜன் (107310சீ), பீ. கார்திராஜன் (107310டீ), எஸ். அமிர்தலிங்கம் (107311ஏ), எஸ். பரமாநந்தன் (107312 ஏ). பீ. கோபிநாதன் (107312பீ), டாக்டர். ஏ. ஐ. முருசன் (107316ஏ), டாக்டர். பிரட்யூட் (107317 ஏ), வை. ஆர். கந்தசாமி (107318ஏ).

என். நடேந்திரன்(107318 பீ), ஆர். சிவதர்ஷினி (107323ஏ), ஆர். லாம்சஜன் (107323பீ), ஆர். சுபனுஜன் )108323சீ), ஆர். சிவஜனன் (107323டீ), ஆர். கிரிஜன் (107323ஈ), என். எம். இமெல்டா (107324ஏ), எம். மக்சிமாலா (107324பீ),

எஸ். பாலசுப்பிரமணியம் (107326ஏ), பீ அன்சலி றொகான் (107329ஏ). எம். டீ. சுதாஸ் (107330ஏ), எஸ். ரீ. குரூஸ் (107331ஏ),

ஜே. ஸ்ரான்லி (107331 பீ), எஸ். பொனிபஸ் (107331சீ), பீ. செல்வதுரை (107333ஏ) கே. நாகராசா (107336ஏ), ஆர். மைக்கல் (107337ஏ), ஏ. மைக்கல் (107337பீ). கே. குணரட்ணமலர் (107339ஏ , கே சற்குணராணி (107339பீ), பீ. ஆர். கே. ஜெயசீலி (107340ஏ), பீ. ஆர். ரோயல்ஸ் 107340பீ), கே. ரதி (107344ஏ), டாக்டர் பீ. ஏ. ஐ. பீ. பாலசூரியா (107349ஏ).

டாக்டர்எம்பீபீ. பைரோஸ் (107350ஏ), யீ. மேரியூப்பிரசியா (107351ஏ). எஸ். உசோதினி (107352ஏ). எஸ். டிலக்ஷன் (107352பீ), ஆர். ராஜாநந்தன் (107353 ஏ), ஆர். சரோஜினி (107353 பீ), ஆர். ராஜசேகரம் (107353சீ), ஆர். நிரோசன் (107353டீ), ஏ. கணபதிப்பிள்ளை (107354ஏ), ரீ. சதாசிவம் (107356ஏ),

ஜே. யோசப் (107358ஏ), ஜே. சுதர்ஷன் (107358பீ), கே. பத்மலோஜினி (107365 ஏ), கே. டீ. குமார் (107365 பீ), ஆர். நித்தியானந்தன் (107366ஏ), எஸ். கந்தையா (107367ஏ), எஸ் செல்வராணி (107367பீ), எஸ். குவின்ரஸ் (107368ஏ),

ஆர். கமலாதேவி (107372 ஏ),ஆர்.பனுஜா (107372பீ),

ஆர். விஜிதன் [107372 சீ], கே. விஜயலக்சுமி [107379 ஏ], ஏ. சிசிலியா [107381 ஏ], எஸ். பிறேமாவதி [107382 ஏ], எஸ். செந்தில்குமார் [107சீ82 பீ], எஸ். அனோடன் [107382 சீ], ஏ. மைலாசினி [107386 ஏ, சீ. மங்களேஸ்வரி [107392 ஏ. எம். ஆர். ஞானப்பிரகாசம் [107396 ஏ], எம். எச். றொசெனி [107396 பீ],ஆர்.றொஷான் [107396 சீ], வீ. கண்ணகை [107402 ஏ], கே. அன்ரனி [107407 ஏ], எம். எம். பெனடிக்ஸ் [101420 ஏ], எம். சிசிலியா [107420 பீ[, எஸ். கே. அருள்ராஜா [107424 ஏ], சீ. வசிகரன் [107430 ஏ],வீ.எச்.சுமித்ரர [107430 பீ], வீ நாமல் [107430 சீ], ஆர். கந்தசாமி [107431 ஏ], கே. கந்தசாமி [107431 பீ], ஈ மயில்வாகனம் [107432 ஏ]

ஏ. வீ,செலஸ் (107438ஏ), எஸ். ஜெனோவா (107438 பீ), ஐ புஸ்பகாந்தன் (107441ஏ). ஜே. புஸ்பகாந்தி (107441 பீ), கே. அமிர்தலிங்கம் (107442 ஏ), ஏ. கே. ஜெபசீலன் (107446 ஏ), ஜே. தர்மசோதி (107446 பீ), டாக்டர் எஸ். கந்தசாமி 1 7446 சீ). கே கங்காவேணியம்(107448 ஏ,) எஸ். பீ. ஐபர் (107457 ஏ), எஸ்.ஹேமமாலினி (107457 பீ),எஸ்.கஸ்தூரி 107457சீ), எஸ். விநாயரட்ணம் (107457டீ), ஏ. மரியங்கை (107465ஏ,) ரீ. தங்கராஜா (107469ஏ),பீ. எம். யூலிகா (107482ஏ),எஸ்.யேசுதாசன் (107488ஏ). எஸ். செல்வேந்திரன்(107501ஏ), எஸ். சுமதி (107501 பீ). எஸ் சிந்துஜெபா (107501 சீ), எஸ். சுஜிநா (107501 டீ), பீ. பற்றிக் (107507 ஏ). எஸ். விநோதனி (107508 ஏ),

ஆர் தேவபிரியம் (107511 ஏ), ஆர். ராமநாதன் (107525 ஏ), ரீ அருணகிரிராஜா (107527 ஏ), கே. செல்வராஜா (107530 ஏ), எவ் ஆர். ஜே ராஜநாயகம் (107537 ஏ), ஆர். சிவகுமார் (107539 ஏ), கே. சதாசிவம் (107539 பீ), யூ. கதிரமலை (107540 ஏ), சீ. மனோமணி (107837 ஏ), கே. செல்லத்தம்பிசிவம் (107974 ஏ), ஆர். சத்தியானந்தன் (109108 ஏ).

எல். யோகராஜா (109119 ஏ). ஜே. திரேசம்மா (109131 ஏ), ஜே. செபமாலை (109131 பீ), பீ தயாபரன் (109138 ஏ), எம். சச்சிதானந்தன் (109166 ஏ), எஸ். சண்முகரட்ணம் (109174 ஏ), யூ நாகமணி (109176 ஏ), கே. லோகவதி (109176 பீ), டாக்டர். எஸ். நவனீதன் (109183 ஏ), என். அம்ரம் (109183 பீ).

என். அபினி (109183 சீ), என். நகுலேஸ்வரி (109201 ஏ), ரீ. மேரிலலிதா (109205 ஏ). ஏ. செல்லத்துரை (109226 ஏ), வீ. மகாலிங்கம் (109228 ஏ) எஸ். சுரேந்திரன் (109238 ஏ.) எஸ். சுரேந்திரன் (109238 பீ), எஸ். ஜே கொன்சன் (109256 ஏ), பீ. திரேசம்மா (109256 பீ), ஜே. அன்ரனி (109267 ஏ), ஏ. ரேணுகா (109267 பீ).

எவ். ஆர்.ஆர்.எச். சகாயநாயகம் (109281ஏ), ஏ. சுவாமிநாதன் (109297ஏ), எஸ்.ரோஸ்மலர்(109297பீ), எஸ். பிரமினாத் (109297சீ), எஸ். கோபிநாத்(109297டீ), எஸ். விஜிதா (109297ஈ), எஸ். கயானந்தன் (109297 எவ்), எஸ் எஸ். ஜெசிகா (109301ஏ), ஜே.யேசுதாசன் (109306ஏ), என். குலசிங்கம் (109311ஏ),

எம். செந்தில்குமார் (106316ஏ), ரீ. மகேந்திரன் (109338ஏ), கே. சதாசிவம் (109360ஏ), ரீ. சண்முகதாசன் (109380ஏ), ஆர். பிரபாகரன்(109384பீ), வீ. பிரபாகரன்(109384பீ),டாக்டர். வை. எம். கே. சீ. அபேரெட்ண (109390ஏ), கே. சூரியநேசன்(10940)ஏ), பீ. ஏ. அருமைநாயகம் (109426 ஏ),ஜே பிரான்சிஸ்(1096145 ஏ), எவ். பிரான்சிசம்மா (1096145பீ), பீ. ஆறுமுகம் (1098608ஏ), எஸ். பிரதீபன் (1098608பீ),

(தொடரும்)

## பொருள் ஏற்றி வந்த லொறி குடை சாய்ந்தது

### வல்லைப் பகுதியில் சம்பவம்

நெல்லியடி, ஜூலை 22

பருத்தித்துறை துறை முகத்திலிருந்து பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த லொறி ஒன்று, வீதியில் பாதையை விட்டு விலகி, குடை சாய்ந்ததில் லொறியின் முன்புறம் சேதமானது.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் வல்லை புறாப் பொறுக்கி ஆலடியில் இடம் பெற்றது.

பருத்தித்துறை துறை முகத்திலிருந்து, யாழ்ப்பாணத்திற்கு புடைவைகளை ஏற்றி வந்த புத்தூரைச் சேர்ந்த 24 சிறி 1060 இலக்க முடைய லொறியே விபத்துக் குள்ளாகியது. லொறியின் முன்புறம் பலத்த சேதமடைந்தது சாரதி தெய்வா தீனமாக உயிர் தப்பினார்.

இது குறித்து நெல்லியடிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [ஐ - 109]

## மாடுகளுக்கு தடுப்பூசி

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பூசி ஏற்றப் படுகின்றது.

மாடுகள் வைத்திருப்போர் தத்தமது பிரிவுகளுக்குரிய கிராம சேவையாளர்கள் ஊடாக கால்நடை வைத்திய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு வேலணை கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் தெரிவித்துள்ளார். (ஐ-167)

## பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ். பல்கலைக் கழக வெள்ளி விழாவை ஒட்டி நடத்தப்பட இருக்கும் பூப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தனிப்பட்ட ஆண்,பெண் ஒற்றையர், இரட்டையர் கலப்பு இரட்டையர் ஆட்டங்களிலும், பெண்களுக்கான குழு ஆட்டங்களிலும் பங்கு பெற விரும்புவோர் எதிர் வரும் 26 ஆம் திக்குக்கு முன்னர் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அறிவிக்கப் பட்டிருக்கிறது.

விண்ணப்பங்களை ஒப்படைப்பதற்கான இறுதித் தினம் 23 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது (ஐ)

## விசர் நாய் கடித்து பருகாயம்

நெல்லியடி ஜூலை 22

வீட்டு வளர்ப்பு நாய்க்கு சிகிச்சை பெறுவதற்காக, மிருக வைத்தியசாலைக்கு நாயுடன் வந்த பெண்ணை அந்த நாய் அங்கு வைத்து கண்டபடி கடித்தது. அதனால் அப் பெண் இரு கைகளிலும் விரல்களிலும் படுகாயமடைந்தார். பெண்ணைக் கடித்த நாய் பின்னர் அந்த இடத்திலேயே மரணமானது.

இச் சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் மந்திகையிலுள்ள மிருக வைத்தியசாலையில் இடம்பெற்றது.

நவிண்டில் குளங்கரையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியையான இ. மகேஸ்வரி (வயது42) என்பவரே இவ்விதம் நாயினால் கடியுண்டு, மந்திகை மருத்துவ மனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டார்.

அந்த நாய் [illegible] மரணமானதால், அது விசர் நாய் என்று, இனங்காணப் பட்டது. (ஐ-109)

## 'ஹெல்மெற்' அணியாதீர்; படையினர் அறிவுறுத்து

வலி. கிழக்கு, ஜூலை 22

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோர் தலைக் கவசம் (ஹெல்மெற்) அணியவேண்டாம் எனப் படையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

சங்கானை, சுழிபுரம் பகுதியில் உள்ள படையினரே இந்தஅறிவுறுத்தலை விடுத்து வருவதாக அப்பகுதி வாசிகள் கூறுகின்றனர்.

ஹெல்மெற்றுடன் பயணம் செய்வோர் வீதிகளில் மறிக்கப்பட்டு அவற்றை அணிய வேண்டாம் என எச்சரிக்கப் பட்டு வருகின்றனர். [ஐ-180]

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்பிதழ்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்த உள்நாட்டு, வெளிநாட்டு அம்பாள் அடியார்களினதும் அயராத உழைப்பின் காரணமே.

ஆலய நைமித்திய கருமங்கள், அபிஷேகங்கள் மற்றும் விசேட உற்சவங்கள் போன்றவற்றிற்கு குருக்கள் ஒருவரின் சேவை அவசிய மென்பதால், 1985 ஆம் ஆண்டிலிருந்து பிரதிஷ்டாரெத்தினம் சிவஸ்ரீ க. குகதாசக் குருக்கள் அவர்களை ஆலய பிரதம சிவாச்சாரியாராகக் கொண்டு கிரிகைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வருடந்தோறும் ஆங்கில மாத முதற் செவ்வாய் உற்சவமும், மாசி மகத்தைப்பூர்த்தி நாளாகக் கொண்டு இலட்சார்ச்சனையும், சித்திராப் பௌர்ணமி தினத்தன்று திருவிளக்குப் பூசையும் ஏனைய உற்சவங்களும் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

ஆலய வளர்ச்சிக்கும் ஆன்மீக உணர்வுகளை வளர்க்கக் கூடிய விதத்தில் சகல நடவடிக்கைகளுக்கும் உதவி வரும் அந்தணப் பெருமக்கள், மற்றும் அனைத்து அடியார்கள், திருவிழா உபயகாரர்கள், திருப்பணிச் சபை அங்கத்தினர், பரிபாலன சபையினர் யாவருக்கும் அன்னை ஸ்ரீ சாயி துர்க்கா தேவியின் அருள் என்றென்றும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

நா, நித்தியானந்தன்.
தலைவர்,
ஆலய பரிபாலன சபை.


## யாழ். வைத்தியசாலை

எமது வைத்தியசாலை அரையாண்டை பூர்த்தி செய்யும் இவ்வேளையில், நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட சத்திர சிகிச்சை அறையில் சத்திர சிகிச்சைகளை ஆரம்பித்துள்ளோம் என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ சகல நோய்களுக்கான சத்திர சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. (பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றது)

★ யாழ். பிரபல பொதுமருத்துவ நிபுணர், குழந்தை மருத்துவ நிபுணர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் தங்கியிருந்து வைத்தியமும் ஆலோசனையும் நடைபெறுகின்றது.

★ முழுநேர M B B S வைத்தியரின் வெளிநோயாளர் பிரிவு (O. P. D.) இயங்கிக் கொண்டிருக்கிறது.

★ பல் வைத்திய நிபுணரின் வைத்திய ஆலோசனை வாராந்தம் புதன்கிழமை மாலை 5 மணிக்கும்.

★ தோல் வைத்திய நிபுணரின் வைத்திய ஆலோசனை வாராந்தம் புதன்கிழமை மாலை 5 மணிக்கும்.

பிரசவ விடுதி வசதி · ஆய்வுகூட வசதி · E.C G. · NEBULIZER · மருந்தக வசதி

யாழ். குடாநாட்டின் 24 மணிநேர சேவையை வழங்கும் ஒரே ஒரு தனியார் மருத்துவமனை

284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[67622]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணத்தை நிறுத்த வேண்டாம் என
# ஜனாதிபதிக்கு மக்கள் குழு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

முற்றுகைக்கு உள்ளான நிலையில் வாழும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு உலர் உணவு நிவாரணத்தை நிறுத்தக் கூடாது. அதனைத் தொடர்ந்து வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள்குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் இணைச் செயலாளர்களான வணபிதா ஜே.பி.ஈ. செல்வராஜா, சு. பரமநாதன் ஆகியோர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு ஓகஸ்ட் 1 ஆம் திகதியிலிருந்து உலர் உணவு நிவாரணத்தை நிறுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணம் நிறுத்தப்பட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

தவிர்க்க முடியாத காரணங்களினால் யாழ். குடாநாட்டில் புனர்வாழ்வுத் திட்டங்களும் சிவில் நிர்வாகமும் இன்னும் முழுமை அடையவில்லை.

இந்த நிலையில் யாழ். மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

வேலை இல்லாப்பிரச்சினை அதிகரித்த வாழ்க்கைச் செலவு, அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்யும் சக்தியின்மை, போக்குவரத்துச் செலவினையும் சேர்த்து நுகர்வோரிடம் அறவிடுதல், போக்குவரத்து நெருக்கடிகளினால் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடு, சுகாதார சீர்கேடுகள், மருந்து வகைகள் தட்டுப்பாடு, குறைவானகல்வி வசதிகள், முற்றாக அழிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நிவாரணம் வழங்கப்படாமை, பக்க வருமானங்களைத் தந்துகொண்டிருந்த பயன்தரு பழமரங்கள் மற்றும் பனை, தென்னைபோன்ற மரங்கள் கட்டுப்பாடற்ற முறையில் அழிக்கப்பட்டுள்ளமை.

மேலே குறிப்பிடப்பட்ட யாவும் மறுசீரமைக்கும் வரை நிவாரணத்தை வழங்கவேண்டும்.

இப்படிக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது

(இ-5-ரி)

# இருவரை காணவில்லை என
# ஆணைக்குழுவில் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

சாவகச்சேரி மற்றும் நாவற்குழிப் பகுதிகளிலிருந்து இரு இளைஞர்கள் காணாமல் போய்விட்டனர் என்று அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

மட்டுவில், சாவகச்சேரியைச் சேர்ந்த ஆறுமுகம் பரமசிவன் (வயது 18) என்பவர் கடந்த 14 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் —

நாவற்குழி, கைதடியைச் சேர்ந்த கனகலிங்கம் மனோகரன் (வயது 20) என்பவர் கடந்த 19 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் அந்தமுறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## வதிவிடப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 22

நெடுந்தீவுப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட 20முன்னோடிக் கமக்காரர்களுக்கு திருநெல்வேலி விவசாய பயிற்சிப் பாடசாலையில் குறைந்த வெளி உள்ளீட்டு தொழில் நுட்பம் என்ற தலைப்பில் வதிவிடப் பயிற்சி ஒன்று வழங்கப்படவுள்ளது.

கெயர் மற்றும் விவசாயத் திணைக்களங்களின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

# காங்கேசன் முகாமில் 23 பேர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் படையினரால் கைதுசெய்யப்பட்ட 23 பேர் தற்போது காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

அங்கு கைதிகளுடன் உரையாடிய ஆணைக்குழு அதிகாரி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்துகொண்டார். அத்துடன் கைதிகளால் அவர்களின் உறவினர்களுக்காக வழங்கப்பட்ட கடிதங்களையும் அவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த வாரமளவில் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு படையினரால் அனுப்பப்பட்ட 4 கைதிகளின்பெயர் விவரம் வருமாறு:-

★ பாலசுந்தரம் தெய்வேந்திரம் (வயது 21 — பருத்தித்துறை)

★ பாலகிருஷ்ணன் பாலமுரளி (வயது 21 — பருத்தித்துறை)

★ சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன் (வயது 29 — உடுவில்)

★ சுப்பிரமணியம் சசீலன் (வயது 23 — ஏழாலை மேற்கு)

(இ-9)

# அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் மேலும் 17 நுண்கருத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் யாழ். மாவட்டத்தில் மேலும் 17 நுண்கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களுக்கு 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 31 திட்டங்களுக்கு அங்கீகாரமளிக்கப்பட்டு அந்த திட்டங்கள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் விவரம் வருமாறு;-

★ நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம். ஸ்ரீகணேச வித்தியாலயம்— கட்டடங்கள்

★ எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்—கட்டடம்.

★ புளியங்கூடல் —சுயதொழில் முயற்சிக் கடன்.

★ பளை முகாவில் ஜி. ரி. எம். எஸ் பாடசாலை — கட்டட புனரமைப்பு.

★ பளை தம்பலகாமம் — சுயதொழில் முயற்சி கடனுதவித் திட்டம்.

★ புலோப்பளை ஆர், சி. ரி. எம். எஸ்.—கட்டடம்.

★ சண்டிலிப்பாய் பெரியவிளான் ஆர். சி. ரி. எம். எஸ்.—கட்டடம்.

★ மாரீசன்கூடல் ஆர். சி. ரி. எம். எஸ்.—கட்டடம்.

★ கோப்பாய் மத்தி— சுயதொழில் கடனுதவி திட்டம்.

★ கோப்பாய் மத்தி ஆர். சி. ரி. எம். எஸ்.—கட்டடம்.

★ யாழ்ப்பாணம் கூட்டுறவு பயிற்சி நிலையம்—கட்டடம்.

★ சங்கானை பெரியபுலோ —சுயதொழில் கடனுதவித் திட்டம்.

★ இணுவில் தெற்கு, மேற்கு—சுயதொழில் கடனுதவித் திட்டம்.

★ கந்தரோடை—உடுவில்— சுயதொழில் கடனுதவி திட்டம்.

★ குப்பிளான் - சுன்னாகம் —சுயதொழில் முயற்சி கடன் திட்டம்.

(இ-5)

## இடர்காலக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஜெயதிலக, கல்விநூல் வெளியீட்டுத் திணைக்கள நாயகம் ஈ.டபிள்யூ. அபயநாயக்க ஆகியோர் பேச்சில் பங்குபற்றினர்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சங்கத்தின் தலைவர் சி. குமாரதாசன், பொதுச் செயலாளர் த. மகாசிவம், நிர்வாகச்செயலாளர் சி. சரவணபவானந்தன், துணைப் பொதுச் செயலாளர் தி. கணேசராசா, மத்தியகுழு உறுப்பினரான ச. ஸ்ரீகாந்தன் மன்னார் பிரதேச பிரதிநிதி பீரிஸ் ஆகியோர் பங்குபற்றினர்.

பேச்சுவார்த்தையில் இணக்கம் ஏற்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ இடர்காலக் கொடுப்பனவு மற்றும் அதிபர்களுக்கான சம்பள நிலுவை ஆகியவற்றுக்கு 25 கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் உடனடியாக 15 கோடி ரூபா மாகாண சபைக்கு வழங்கப்படவிருக்கின்றது. எஞ்சிய தொகை இரு மாதங்களில் வழங்கப்படும்.

★ தமிழ் பாடநூல்களில் 1, 6, 9 ஆகிய வகுப்புகளின் பாடநூல்களில் தவறுகள் உள்ளன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பாட நூல்கள் இந்த வருட இறுதியில் முற்றாக வாபஸ் பெறப்படவிருக்கின்றன. அடுத்த ஜனவரியில் திருத்தப்பட்ட புதிய பாடநூல்கள் வழங்கப்படும். இந்தப் பாடநூல்களில் உள்ள தவறுகள் தொடர்பான அறிக்கை மூன்றாம் தவணைக்கு முன்பாக சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்படும். அடுத்த வருடம் வெளியிடப்படும் புதிய பாடநூல்களை அச்சிட முன்னர் தமிழர் ஆசிரியர் சங்கத்தால் நியமிக்கப்படும் குழு அவற்றைப் பார்வையிட அனுமதிக்கப்படும்.

★ வடக்கு — கிழக்கில் மேலதிக மாகாணப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர். ஒவ்வொரு வலயத்துக்கும் வலயப் பணிப்பாளர், 5 பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், எட்டு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர். இந்தப் பதவிகளுக்கு போதிய ஆளணியினர் நிர்வாக சேவையில் இல்லையாயின் அதிபர் தரம் 2 — 1 இல் உள்ளவர்களை பிரதிக் கல்விப்பணிப்பாளர்களாகவும். ஏனைய தரத்தில் உள்ள அதிபர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளை உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகவும் நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது

★ வடக்கு — கிழக்குக்கு வெளியே 50 பாடசாலைகளுக்கு ஒருவர் என்ற வீதத்தில் தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர்களை நியமித்தல்.

★ இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு கற்றல் கற்பித்தல் உபகரணங்களை எடுத்துச்செல்ல அனுமதித்தல். அந்த உபகரணங்கள் தொடர்பான விபரங்களை வடக்கு — கிழக்கு ஆளுநரின் சிபார்சுக்கு முதலில் சமர்ப்பித்து அனுமதிபெறவேண்டும்.

★ வடக்கு—கிழக்கில் ஆயிரத்து 500 ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சை மூலம் விரைவில் நியமிக்கப்படுவர். தொண்டர் ஆசிரியர்கள், வவுனியா, மட்டக்களப்புக் கல்விக் கல்லூரிகள், மட்டக்களப்பு விபுலாநந்தர் கல்லூரி, யாழ். நுண்கலைப் பீடம் ஆகியவற்றில் இருந்து வெளியேறியோருக்கு முன்னுரிமை அளித்தல்.

★ முன்னர் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு பிரதேச செயலர் வேறுபாடின்றி சகல இடங்களிலும் நியமனம் வழங்கல்.

## பத்திரிகையாளர்..

(முதலாம் பக்கத் தொடர்)

பொலிஸார் சிலரைத் தாக்கினர்.

ஆனால் முன்னேறிச் சென்ற ஊர்வலத்தினரை அலரி மாளிகையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் தடுத்து நிறுத்திய பொலிஸார் ''கரும் புலிகள் நகரில் ஊடுருவியுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)


# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 30 - 07 - 1999 ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே நண்பகல் 12 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை, ''தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி'' என்ற முகவரிக்கும் இணைப் பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 30 - 07 - 1999 ஆம் திகதி மு. ப. 9 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|
| 01. அச்சுவேலி பஸ் நிலையத் திருத்தம் | 2000-00 | 250-00 |
| 02. ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்க பாலர் பாடசாலைத் திருத்த வேலை | 1500-00 | 250-00 |
| 03. யோகபுரம் பொதுக் கிணறு அமைத்தல் | 500-00 | 150-00 |
| 04. அறிவொளி ஐக்கிய சனசமூக நிலையம், புத்தூர் | 500-00 | 150-00 |
| 05. நவசக்தி சனசமூக நிலையம், உரும்பிராய் வடக்கு | 500-00 | 150-00 |
| 06. குருநாதர் சனசமூக நிலையம், புத்தூர் | 500-00 | 150-00 |
| 07. வைத்தீஸ்வரா சனசமூக நிலையம், உரும்பிராய் மேற்கு | 1500-00 | 250-00 |
| 08. பொக்கணை வீதி, ஊரெழு | 500-00 | 150-00 |

மேற்படி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 29 - 07 - 1999 ஆம் திகதி பி. ப. 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பூ. குணசிங்கம்
தவிசாளர்

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
21 - 07 - 1999

(அ/8256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிகையாளர்...

(9 ஆம் பக்கத் தொடர்)

அலரி மாளிகைக்குச் செல்ல அனுமதிக்க முடியாது'' என்று ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

ஊர்வலத்தில் கொண்டு சென்ற, தொடர்புத்துறை அமைச்சர் மங்களசமரவீர, பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டமைக்குக் காரணமான பொலீஸ் அதிகாரி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் கருணாரத்தின ஆகியோரின் கொடும்பாவிகளை அங்கு வைத்து எரித்த பத்திரிகையாளர்கள் ஒப்பாரி வைத்து கோஷமிட்டனர்.

பத்திரிகையாளர்களின் இந்த ஊர்வலத்தில் சுமார் ஆயிரம் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (இ-3)

## மாதர் சங்க கூட்டம்

நீராவியடி (ஜே101) கிராம சேவையாளர் பிரிவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவிருக்கின்றது.

## முகாம்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் ஆவர்.

தம்பாலைப் பகுதியில்உள்ள தோட்டகாணி ஒன்றில் குண்டு ஒன்று புதைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்ட தகவலை அடுத்து பிரஸ்தாப இராணுவ அதிகாரியும் லான்ஸ் கோப்ரலும் குண்டை மீட்க முயன்ற போது அந்தக் குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக தோட்ட உரிமையாளரை இராணுவத்தினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்தக் குண்டு முன்னரே நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததா? அல்லது புதிதாக புதைத்து வைக்கப்பட்டிருந்ததா என்பது தெரியவரவில்லை என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெடிச்சத்தம் கேட்டசிறிது நேரத்தில் தமக்கு முன்னால் கால் ஒன்று வந்து விழுந்தது என்றும்—

தாம் பயத்தினால் அங்கிருந்து ஓடியதாகவும்— சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு சமீபமாக நின்ற விவசாயிகள் சிலர் தெரிவித்தனர்.

(இ-5-178-180)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 22

அளவெட்டி அருணோதயா கல்லூரி கலை, வர்த்தக மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க.ரதீதரன் கருத்துரை வழங்குவார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்கள் தமக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்ல பாதை ஒன்றைத்திறப்பது தொடர்பாகப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன என்றும்—

அதுவரை இந்த விடயத்தில் தம்மால் எதுவும் செய்ய முடியாது உள்ளது என்றும்— அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தனர்.

இதேவேளை— இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து மன்னாருக்கு வந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாது இருப்பவர்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் துணையுடன் கடல்மார்க்கமாக அனுப்பநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட செயலக அதிகாரிகளும், பிரஜைகள் குழுவினரும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடல் மார்க்கமாகச் செல்வதற்கு பிரஜைகள்குழு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 200 பேரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் மற்றும் இந்தப் பிரயாணத்துக்கான அனுமதி கோரும் கடிதங்கள் என்பன வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அநேகமாக இந்தப் பயணத்துக்கான அனுமதி இன்று கிடைக்கலாம் என்றும்—

அனுமதி வழங்கப்பட்டால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் 12 படகுகளில்இவர்கள் மன்னார் கரையோரப் பிரதேசம் ஒன்றில் இருந்து ஏற்றிச் செல்லப்பட்டு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள பாலம்பிட்டியில் இறக்கிவிடப்படுவார்கள் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-6-164)

### காணாமற்போனோர் பற்றிய

# முறைப்பாடுகளை பதிவுசெய்ய சனிக்கிழமை முதல் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 22

1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பாக இதுவரை முறைப்பாடு செய்யாதவர்கள் நாளை மறுதினம் முதல் முறைப்பாடுகளை யாழ். பொலீஸில் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காக குற்றப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் நாளை மறுதினம் முதல் அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரை யாழ். பொலீஸ் நிலையத்தில் தங்கியிருப்பர் என்றும் —

அந்தக் காலப் பகுதியில் எவரும் முறைப்பாடு செய்யலாம் என்றும் — குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## 250 வீடுகள் தீக்கிரை

சென்னை, ஜூலை 22

தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டத்தில் இடம்பெற்ற தீவிபத்தில் 250 வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளதுடன் 60 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓலைக்குடிசை ஒன்றில் தவறுதலாக ஏற்பட்ட தீ பரவியதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

## ஷெல் தாக்குதல்!

வவுனியா, ஜூலை 22

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மணலாறு முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் சரமாரியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

செம்மலை மகாவித்தியாலயத்துக்கு அருகில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் பாடசாலையின் அதிபர் அலுவலகப் பகுதி சேதத்துக்குள்ளானது.

இதேவேளை — நேற்றுப் பிற்பகலும் மணலாறு முகாமில் இருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## செஞ். அலுவலக...

(முதலாம் பக்கத் தொடர்)

மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

இந்த நான்கு நோயாளிகளில் ஒருவர் சிறுநீரகம் செயலிழந்த நிலையிலும் —

மற்றொருவர் செப்ரிசீமியா நோயினாலும் —

மற்றைய இருவரும் நரம்புப் பலவீனத்தால் அவயவங்கள் செயற்பட முடியாத நிலையிலும்— உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர் என்று வைத்தியர்கள் செஞ்சிலுவை அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

மல்லாவியில் செயற்படும் எம். எஸ். எவ். அதிகாரிகளிடம் அங்குள்ள நோயாளிகளின் நிலை குறித்து வவுனியா வைத்திய அதிகாரி அறிந்து வருகின்றார். (இ-3-6)

## விஞ்ஞான ...

(முதலாம் பக்கத் தொடர்)

எதுவும் இல்லை என்றும் —

பகுதி இரண்டில் கட்டமைப்பு வடிவத்தில் மாற்றம் இல்லை. ஆனாலும் கட்டுரை வடிவத்தில் கேட்கப்படும் 6 வினாக்களில் 4 வினாக்களுக்கு மட்டுமே விடை அளிக்கவேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-)

## ரணில்...

[முதலாம் பக்கத் தொடர்]

நாளை கறுப்பு ஜூலை தினமாக இருப்பதால் இன்றைய ஆர்ப்பாட்டத்துடன் வன்முறைகள் வெடிக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று அவர்கள் அச்சம் தெரிவித்தனர்.

அதேநேரம்—ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று ஏற்பாடு செய்த பேரணி ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும்—

தற்போது உருவாகியுள்ள பதற்றமான சூழ்நிலையில் பேரணி நடத்த விரும்பவில்லை எனவும் — அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார். (இ-3-6)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதையடுத்துப் பொலீஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் தாயார் ஒருவரும் அவரது நான்கு வயதுக் குழந்தையும் காயமடைந்து ஏறாவூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-6-21)

எமது புதிய வீடியோ வெளியீடு

பார்த்தீபன், சிம்ரான் நடித்த

அந்தப்புரம்

24 மணிநேரத்தில் தயாரிக்கப்பட்ட

சுயம்வரம்

திரையரங்குகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

புதிய போஸ்டர்கள் விற்பனைக்கு உண்டு.

நவம் வீடியோ

ஓடக்கரை, பருத்தித்துறை.

[67621]

எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு!

சென்னை போலீஸ்

எமது இன்றைய வீடியோ CD வெளியீடு!

வன்முறை

நாளைய வீடியோ CD வெளியீடு!

அந்தப்புரம்

விரலுக்கேத்த வீக்கம்

புதிய ஓடியோ - வீடியோ போஸ்ரர்களும் விற்பனைக்கு உண்டு.

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/8264)

எமது புதிய வீடியோ வெளியீடு!

பார்த்திபன் நடித்த

அந்தப்புரம்

அடுத்த வெளியீடு!

பிரகாஸ்ராஜின் வித்தியாசமான நடிப்பில்

மிஸ்ரர் - Z

புதிய ஓடியோ CD வெளியீடு!

கனவே கலையாதே

★ புதிய பட ஓடியோ CD களும் விற்பனைக்கு உண்டு.

விலை 650/-

சுப்பஸோ வீடியோ

149, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/8265)

எமது இன்றைய வீடியோ வெளியீடு

பார்த்திபன் – சிம்ரான்

அந்தப்புரம்

லிவிங்ஸ்ரன் – நாசர் – குஷ்பு

விரலுக்கேத்த வீக்கம்

அடுத்த வெளியீடு

சுயம்வரம்

போஸ்ரர்களும் விற்பனைக்கு உண்டு.

ஆர்க் வீடியோ லைபிறறி

51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

(67629)

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி

உங்கள் கலர்ப்படச் சுருள்களை உரிய

தரம் வாய்ந்ததாகவும் தரம் குன்றாததாகவும்

மூன்று, நான்கு தினங்களில் பிரதியாக்கம்

செய்து தரும் ஒரே ஸ்தாபனம்

சுப்பஸோ கலர் லாப்

உங்களுக்குத் தேவையான படங்களைப் பிடித்திடவும்

உடனுக்குடன் பெற்றிடவும்

நாடவேண்டிய ஒரே இடம்

சுப்பஸோ

198/5, நாவலர் வீதி, 100A, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(சி/8262)

எமது ஓடியோ CD வெளியீடுகள்

கனவே கலையாதே

பரணி

வாய்ப் பேச்சு

மெலோடியஸ் மியூசிக்

303, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.

(67630)

அளவெட்டி நாகேஸ்வரம்

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா

ஆடி - ஏகாதசி தீர்த்த விழா

ஷ ஆலயத்தில் 24-07-99 சனிக்கிழமை

மு. ப. 8.00 மணிக்கு ஆரம்பமாகி

சங்காபிஷேகமும் தீர்த்த உற்சவமும் நிகழும்.

பொ. ப. சபை.

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்,

அளவெட்டி.

(சி/8238)

பொருளியற் கருத்தரங்கு

இடம்: யாழ். கனகரத்தினம் ம. ம. வி.

காலம்: 23-07-99 பி, ப, 2.30, 24-07-99 பி. ப. 2.30

விடயம்: நடைமுறைவிடயங்களும் பரீட்சைவழிகாட்டலும்

கருத்துரை: திரு. வே. கருணாகரன்

–வணிக மாணவர் மன்றம்.

[67611]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-07-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org